சிழல் சென்:

அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகர்

இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்களுக்கான சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி

கோவை (13ம் அணி) / வேலூர் (14ம் அணி) /திருச்சி (15ம் அணி) /தூத்துக்குடி (16ம் அணி)

நிறைவுத் தேர்வு - கணக்கு – I ம் தாள் (புத்தகமின்றி)

நாள் 09.04..2012

நேரம் 10.00 – 10.15 மு.ப மதிப்பெண் 10.

குறிப்பு 1. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு √ செய்யவும்

---

1. கீழ்க்கண்டவற்றில் எது பணிக்காலமாகக் கருதப்படுவதில்லை
(அ) அறிவுரை காலம் (ஆ) முன் அனுமதியுடன் பங்கேற்ற கட்டாயத் தேர்வு
(இ) தேர்வு நடைபெறுகின்ற இடத்திற்கு சென்று வர தேவையான பயணநாட்கள்
✓(ஈ) ஒரே தேர்வுக்கு மூன்றாவது முறையாக பங்கேற்று தேர்வும் காலம்.

2. சிறப்பூதியம் கீழ்க்காணும் காரணங்களுக்காக வழங்கப்படுவதில்லை
(அ) மிகவும் கடினமான பணிகள் செய்ய நேரிடுவதால்
(ஆ) பொறுப்புடன் கூடுதலான குறிப்பிட்ட பணி
✓(இ) ஊதியத் திருத்தங்களின் காரணமாக குறைக்கப்பட்டதால்
(ஈ) சுகாதாரமற்ற பகுதிகளில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை

3. தகுதிகாண் பருவம் முடித்த ஒரு அலுவலர் 1.7.2011 முதல் 31.12.2011 வரை உள்ள காலத்தில் மருத்துவச் சான்றில்லாத அசாதாரண விடுப்பு 14 நாட்கள் எடுத்துள்ளார். அவருக்கு 1.1.2012ல் ஈட்டிய விடுப்பு முன் வரவுக்கு தகுதியான நாட்கள்
✓(அ) 14 நாட்கள் (ஆ) 13 நாட்கள் (இ) 15 நாட்கள் (ஈ) 1 நாள்

4. அயல் நாட்டில் பணிபுரிவதற்கான விடுப்புக்கு தகுதியற்றவர்
(அ) அரசின் 'அ' பிரிவு அலுவலர்கள் (ஆ) அரசின் "ஆ" பிரிவு அலுவலர்கள்
(இ) அரசின் 'இ' பிரிவு அலுவலர்கள் (ஈ) ✓தகுதிகாண் பருவத்தினர்

5. ஒரு அலுவலர் பணியிட மாறுதலின் போது பழைய தலைமையிடத்திலிருந்து துவக்கத்தில் 125 கி.மீ. தூரம் பேருந்திலும் பின்னர் ரயிலில் 420 கிமீ தூரமும் முடிவில் 7 கிமீ தூரம் பேருந்திலும் பயணம் செய்து புதிய தலைமையிடத்தை சென்றடைந்தார். அவருக்கு தகுதியான பயண நாட்கள்.
(அ) 4 நாட்கள் (ஆ) 3 நாட்கள்✓ (இ) 5 நாட்கள் (ஈ) 6 நாட்கள்

6. 7.5.2006 முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்ட ஒரு வேளாண்மை அலுவலர் தகுதிகாண் பருவத்தில் அரசு சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு முதல் பாகமும் வேளாண்மைத் தேர்வும் தேர்ச்சி பெற வேண்டும். அவர் குறிப்பிட்ட 2 தேர்வுகளிலும் 29.9.2008 அன்று (கடைசி தேர்வு நாள்) தேர்ச்சி பெறுகிறார். அவரது இரண்டாவது ஊதிய உயர்வு நாள்.
(அ) 1.4.2008 (ஆ) 29.9.2008 (இ)✓ 30.9.2008 (ஈ) 6.5.2008

7. கீழ்க்கண்டவற்றில் எது திரள் விளைவின்றி ஊதிய நிறுத்தத்தின் விளைவு ஆகாது?
(அ) ஊதிய உயர்வு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே தள்ளிப் போகும்
(ஆ) எதிர்வரும் ஆண்டுகளில் ஊதிய உயர்வு நாட்களிலேயே அளிக்கப்படும்
(இ) தண்டனை காலத்தில் விடுப்பு எடுத்தால் விடுப்புக்கு இணையான காலம் ஊதிய உயர்வு தள்ளிப் போகும்
(ஈ)தண்டனை காலத்தில் விடுப்பு எடுத்தால் விடுப்புக்கு இணையான காலம் ஊதிய உயர்வு தள்ளிப் போகாது ✓

8. மூத்தவர் இளையவர் ஊதிய முரண்பாடு சரி செய்திட கீழே குறிப்பிட்டுள்ள எந்த நிபந்தனை பொருந்தாது
✓(அ) மூத்தவர் கீழ்நிலை பதவியில் மருத்துவச்சான்று அல்லாத அசாதாரண விடுப்பு துய்த்ததால் ஊதிய முரண்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும்
(ஆ) மூத்தவரும் இளையவரும் ஒத்த பணி நிலையைச் சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்
(இ) அ.வி.22 ஆ அமுல் படுத்தியதில் ஊதிய முரண்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும்.
(ஈ) சாதாரண நிலை பதவியில் மூத்தவர் இளையவரைவிட அதிக ஊதியம் (அ) சமமான ஊதியம் பெற்றிருக்க வேண்டும்

9. அனுமதிக்கப்பட்ட பயணப்படி பெறும் ஒரு அலுவலர் அரசு ஊர்தியை பயன்படுத்திய நாட்களுக்கு விகிதாசாரப்படி கணக்கிட்டு எவ்வளவு சதவீதம் வழங்கப்படும்

(அ) 25 % (ஆ) 50 % (இ) ✓ 75 % (ஈ) தகுதியில்லை

10. பயணப்படி பட்டியல்கள் கட்டுப்பாட்டு அலுவலரின் மேலொப்பம் பெறாமல் பணமாக்கக்கூடாது. இந்த விதி இவருக்கு பொருந்தாது.

(அ) துணை ஆட்சியர் (ஆ) வட்டாட்சியர்
(இ) வருவாய் கோட்டாட்சியர் (ஈ) கண்காணிப்பு பொறியாளர் ✓

11. தர ஊதியம் ரூ.5700- பெறும் ஒரு அலுவலர் தலைமையிடம் பவானிசாகர் ஆகும். அலுவல் பயணமாக 19.3.2012 மாலை 6.00 மணிக்கு தூத்துக்குடி புறப்படுகிறார் தூத்துக்குடியில் அலுவல் பயணத்தை முடித்துக் கொண்டு 21.3.2012 காலை 10.00 மணிக்கு பவானிசாகர் திரும்பினார். அலுவல் பயணத்தில் அவருக்கு தகுதியான தினப்படி.

(அ) ரூ.300- ✓ (ஆ) ரூ.400- (இ) ரூ. 200- (ஈ) ரூ.160-

12. ரூ.6600- தர ஊதியம் பெறும் ஒரு அலுவலர் மாநிலத்திற்கு வெளியே பணி மாறுதல் செய்யப்பட்டார். அவருக்கு தகுதியான ஒட்டு மொத்தப் படி.

(அ) ரூ.1800- (ஆ) ரூ.3600- ✓ (இ) ரூ.2850 (ஈ) தகுதியில்லை

13. நிலை I ல் தர ஊதியம் பெறும் ஒரு அலுவலர் மாறுதல் பயணத்தின் போது 48 குவிண்டால் எடையில் 4 குவிண்டால் எடையினை பயணிகள் ரயிலிலும் மீதி சரக்கு ரயிலிலும் எடுத்துச் சென்றார் அவர் சரக்கு ரயிலில் எடுத்துச் செல்ல தகுதியான எடை எவ்வளவு?

(அ) 45 குவிண்டால் (ஆ) ✓ 43 குவிண்டால் (இ) 44 குவிண்டால் (ஈ) 41 குவிண்டால்

14. தற்காலிக ஓய்வூதியம் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் அனுமதிக்கப்படுவதில்லை.

(அ) ஓய்வூதிய முன்மொழிவுகள் மாநில கணக்காயருக்கு அனுப்புவதில் தாமதம் நேரிடும் போது
(ஆ) மாநில கணக்காயரின் ஆணை கிடைப்பதில் தாமதம் ஏற்படும் போது
✓(இ) ஒழுங்கு நடவடிக்கை முடியாமல் இருப்பதற்கு அரசு ஊழியரே காரணமாகும் போது
(ஈ) நிலுவையிலிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு குந்தகம் இல்லாமல் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கும் போது.

15. பயண முன்பணம் பெற பட்டியல் படிவ எண்

(அ) TNTC 47 (ஆ) TNTC 52 (இ) TNTC 22 ✓ (ஈ) TNTC 49

16. பணித்துறை என்பதற்கான உதாரணம்

(அ) வருவாய்த்துறை (ஆ) ✓ காவல்துறை (இ) ஊரக வளர்ச்சித் துறை (ஈ) கருவூலத்துறை

17. இறுதியாக திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அறிக்கை அரசுக்கு அனுப்ப வேண்டிய மாதம்

(அ) ஆகஸ்டு (ஆ) அக்டோபர் (இ) ஜனவரி ✓ (ஈ) மார்ச் 31க்கு முன்

18. அவசர நிதியை முறைப்படுத்தும் அதிகாரம் பெற்றவர்

(அ) முதலமைச்சர் (ஆ) பிரதமர் (இ) ✓ ஆளுநர் (ஈ) மாநில கணக்காயர்

19. 86 வயது குடும்ப ஓய்வூதிய தாரருக்கு குடும்ப ஓய்வூதியத்துடன் வழங்கத்தக்க கூடுதல் குடும்ப ஓய்வூதியம்.

(அ) 20 % (ஆ) 30 % ✓ (இ) 40 % (ஈ) 50 %

20. எந்த தேதி முதல் ஓய்வூதியத்தை இரண்டாம் முறை ஒப்புவிக்க செய்ய அனுமதி இல்லை

(அ) 14.12.1987 (ஆ) 30.10.1987 (இ) 1.4.1987 (ஈ) 1.2.1987 ✓

---

பயிற்சியாளர் கையொப்பம்

அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகர்
இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்களுக்கான சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி
கோவை 9ம் அணி / வேலூர் 10ம் அணி / திருச்சி 11ம் அணி / தூத்துக்குடி 12ம் அணி

நிலைவுத் தேர்வு
கணக்கு – I ம் தாள் (புத்தகமின்றி)

நாள் 18.02.2012
நேரம் 10.00 – 10.15 மு.ப                                        மதிப்பெண் 10.

குறிப்பு – 1. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு √ செய்யவும்

---

1. கட்டணங்கள் என்பதொரு அரசு ஊழியருக்கு கீழ்க்கண்ட இனங்கள் மூலமாக வழங்கப்படுகிறது
✓ (அ) தொகுப்பு செலவினங்கள் என்ற தலைப்பிலிருந்து
(ஆ) மாநில அரசின் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து
(இ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து      (ஈ) ஏதுமில்லை

2. சிறப்பூதியம் கீழ்க்காணும் காரணங்களுக்காக அனுமதிக்கப்படுவதில்லை
✓ (அ) ஊதிய திருத்தங்களின் காரணமாக குறைக்கப்படுதால்
(ஆ) மிகவும் கடினமான பணிகள் செய்ய நேரிடுவதால்
(இ) அதிக பொறுப்புகளுடன் கூடுதலான பணி
(ஈ) சுகாதாரமற்ற பகுதிகளில் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை

3. பிப்ரவரி 2012க்கான ஒப்படைப்பு விடுப்பு காலத்திற்கான விடுப்பு ஊதியம் எந்த விகிதத்தில் கணக்கிட வேண்டும்.
✓ (அ) 1/30      (ஆ) 1/28      (இ) 1/29      (ஈ) 1/31

4. தற்காலிக பணியிலுள்ள பெண் அரசு ஊழியரின் ஈட்டிய விடுப்பு கணக்கில் இருப்பு 15 நாட்கள் உள்ள நிலையில் கருவுற்ற 15 வாரம் கழித்து கருச்சிதைவு ஏற்பட்டதற்கான தகுதியான விடுப்பு எவ்வளவு?
✓ (அ) 27 நாட்கள்      (ஆ) 42 நாட்கள்      (இ) 67 நாட்கள்      (ஈ) தகுதியில்லை

5. அனுபவிக்காத பணியேற்பு இடைக்காலத்தை சனிக்கிழமை, அரசு விடுமுறைகளைத் தவிர்த்து உச்சபட்சம் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சேர்க்கலாம் என்ற நடைமுறை அமலுக்கு வந்த நாள்
(அ) 12.02.1990      ✓ (ஆ) 21.03.1986      (இ) 30.10.1987      (ஈ) 01.07.1994

6. தற்காலிக அரசு ஊழியர்களுக்கு சிறப்பு இயலாமை விடுப்பு அதிகபட்சமாக பிற விடுப்புகளுடன் எவ்வளவு காலம் வழங்கலாம்.
(அ) 6 மாதங்கள்      (ஆ) ✓ 24 மாதங்கள்      (இ) 12 மாதங்கள்      (ஈ) ✓ தகுதியில்லை

7. ஒரு அலுவலர் பணியேற்பிடைக்காலத்தில் இருக்கும் போது மருத்துவச் சான்றில்லாத வேறு விடுப்பில் சென்றால் அவருக்கு தகுதியான பணியேற்பிடைக் காலம்
(அ) தயாரிப்புக்காலம் மற்றும் பயண நாள்      (ஆ) தயாரிப்புக்காலம் மட்டும்
(இ) பயண நாள் மட்டும்      (ஈ) தகுதியில்லை ✓

8. தண்டனைக் காலத்தில் உள்ள அரசு ஊழியர் ஒருவர் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால் அவருக்கு முன் ஊதிய உயர்வு
(அ) தேர்வு முடிவுகள் வெளியான நாளுக்கு மறுநாள் முதல் வழங்க வேண்டும்
✓ (ஆ) தேர்வு எழுதிய நாளுக்கு மறு நாள் முதல் வழங்க வேண்டும்
(இ) தண்டனை முடிந்த பின்னர் வழங்க வேண்டும்      (ஈ) தகுதியில்லை

9. சொந்த சிறுந்து வைத்துக் கொள்ள அதிகாரம் பெற்ற ஒரு அரசு அலுவலர் அலுவல் நிமித்தம் 324 கி.மீ. தூரம் (போக,வர) பயணம் செய்ய தனது சொந்த சிறுந்தை பயன் படுத்தினார். அவருக்கு தகுதியான தூர பயணப்படி
(அ) ரூ.2592- (ஆ)✓ரூ.2560 - (இ) ரூ. 1296 (ஈ) தகுதியில்லை

10. சென்னையை தலைமையிடமாகக் கொண்டு ரூ.6600- தர ஊதியம் பெறும் அலுவலர் அலுவல் காரணமாக ஊட்டி சென்று 24 மணி நேரத்திற்கு மேல் தங்குகிறார். அவருக்கு தகுதியான தினப்படி நாள் ஒன்றுக்கு
(அ) ரூ.400- (ஆ) ✓ரூ.300- (இ) ரூ.600 (ஈ) ரூ.266

11. திருமணமான பெண் அரசு ஊழியருக்கு மாறுதல் பயணப்படி கணக்கிட குடும்ப உறுப்பினராக கருதப்படாதவர்
(அ) கணவரின் பாதுகாப்பிலில்லாத திருமணமான மகள் (ஆ) வளர்ப்பு குழந்தைகள்
✓(இ) மாமனார் மற்றும் மாமியார் (ஈ)அரசு ஊழியரை முழுதும் சார்ந்துள்ள தாயார் மற்றும் தந்தை

12. 1954ம் ஆண்டு பிறந்த (மாதம், நாள் தெரியாது) 1.1.1980 முதல் முறையாக பணியமர்த்தப்பட்ட உயர்பணி அலுவலரின் ஓய்வு பெறும் நாள்
(அ) 1.7.2012 பி.ப. (ஆ) 31.12.2012 பி.ப. (இ)✓30.6.2012 (ஈ) கணக்கிட முடியாது

13. ஒரு அரசு ஊழியரது பிறந்த தேதி 1.7.1953, ஓய்வு நாள் 30.6.2011. இறந்த நாள் 4.7.2011. அவரது குடும்பத்துக்கு எந்த நாள் வரை உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும்.
(அ) 1.7.2018 வரை (ஆ) 3.7.2018 வரை (இ)30.6.2018✓ வரை (ஈ) 4.7.2018 வரை

14. ஊதிய பட்டியல்கள் உரிய கருவூலத்திற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
✓(அ) சம்பள மாதத்தின் கடைசி 5 நாட்களுக்கு முன்னர் (ஆ) சம்பள மாதத்தின் 25ம் தேதி
(இ) ஊதிய நாளுக்கு 5 நாட்கள் முன்னதாக (ஈ) எப்போது வேண்டுமானாலும்

15. சனவரி மாதத்தில் அரசுக்கு அனுப்ப வேண்டிய அறிக்கை
(அ) அடுத்த ஆண்டின் வரவு செலவு மதிப்பீடு அறிக்கை (ஆ) திருத்திய மதிப்பீடு அறிக்கை
✓(இ) இறுதியாக திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அறிக்கை (ஈ)பணியாளர் எண்ணிக்கை அறிக்கை

16. இந்த கணக்கை கையாளுவதில் மாநில அரசு பேங்கராக செயல்படும்
(அ) வைப்பு தொகைகள் (ஆ) வரைவுகள் ரிசர்வ் தொகைகள்
(இ) ஒருங்கிணைந்த நிதியில் வராத கணக்குகள் (ஈ) இவை அனைத்தும்✓

17. கீழ்க்கண்டவற்றில் எது 'சுமத்தப்பட்ட செலவினங்கள்' என்ற தலைப்பில் வராது?
(அ) கடன்கள் மற்றும் திரும்ப கட்டப்படும் கடன்களுக்கான வட்டிகள்
(ஆ) நீதிமன்ற ஆணையின்படி கட்ட வேண்டிய தொகைகள்
(இ) நிலங்கள் கையகப்படுத்துதல் (ஈ) ஏதுமில்லை✓

18. பயணப்படி பட்டியல் கருவூலத்தில் சமர்ப்பிக்க பயன்படும் TNTC படிவம் எண்
(அ) TNTC 58 (ஆ) TNTC 40 (இ) TNTC 47 (ஈ) TNTC 52 ✓

19. 1.4.2003க்கு பின்னர் தமிழ்நாடு அரசுப்பணியில் சேர்ந்தவர்களுக்கு பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தில் 10% பிடித்தம் எந்த தொகையில் செய்யப்படுகிறது
(அ) ஊதியம் + தர ஊதியம் (ஆ) ஊதியம் + தர ஊதியம் + அகவிலைப்படி + வாடகைப்படி
(இ) ஊதியம் + தர ஊதியம் + அகவிலைப்படி + அனைத்துப் படிகள்
✓(ஈ) ஊதியம் + தர ஊதியம் + அகவிலைப்படி

20. நிலையான முன்பண நீட்டிப்பு விவரத்தை ஒவ்வொரு ஆண்டும் எந்த தேதியில் மாநில கணக்காயருக்கு தெரிவிக்க வேண்டும்
(அ) சனவரி -1 (ஆ) மார்ச் - 31 (இ) ஏப்ரல் - 1 (ஈ) ஏப்ரல் - 15 ✓

பயிற்சியாளர் கையொப்பம்

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்
இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்கள் சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி
கோவை 5ம் அணி /வேலூர் 6ம் அணி / திருச்சி 7ம் அணி / தூத்துக்குடி 8ம் அணி
நிறைவுத் தேர்வு

கணக்கு – I ம் தாள் (புத்தகமின்றி)

நாள் 29.12.2011
நேரம் 10.00 – 10.15 மு.ப

சுழல் எண்
மதிப்பெண் – 10

குறிப்பு – 1. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு √ செய்யவும்

---

1. ஒரு அரசு ஊழியர் திறமை குறைவு காரணமாகவோ (அ) நன்னடத்தை அற்றவர் என்பதற்காகவோ (அ) அவரது சொந்த விருப்பத்தின் பேரிலோ அன்றி அவர் பெற்றுவரும் ஊதியத்திற்கும் குறைவான ஊதியமுள்ள பணியிடத்தில் அமர்த்தப்படக் கூடாது.
(அ) அ.வி. 10 (ஆ) அ.வி. 11 (இ) அ.வி. 15 ✔ (ஈ) அ.வி. 12

2. 5 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு விடுப்பு கணக்கு திருத்தி அமைக்கும் முறை எந்த தேதி முதல் கிடையாது
(அ) 30. 6. 1994 (ஆ) 21. 3. 1986 (இ) 1. 6. 1988 (ஈ) 1. 7.1994 ✔

3. அனுபவிக்காத பணியேற்பிடைக்காலம் 6 மாத காலத்திற்குள் விண்ணப்பித்தால் அதிக பட்சமாக 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம், எனும் வசதி எந்த தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
(அ) 26. 1. 1950 (ஆ) 1. 1. 1922 (இ) 1.1.1974 (ஈ) 21.3.1986 ✔

4. 30.6.2011 பி.ப 5 வருடப் பணி முடித்த அடிப்படைப் பணியாளரின் ஈட்டிய விடுப்புக் கணக்கில் உச்ச பட்ச சேமிப்பு இருந்தால் 1. 7. 2011 பிற்பகல் அவரது விடுப்பு எவ்வாறு இருக்கும்.
(அ) 30 நாட்கள் (ஆ) 240 நாட்கள் (இ) 45 நாட்கள் ✔ (ஈ) மாற்றமில்லை

5. அடிப்படை விதிகள் – அரசு இதனை திருத்தவோ, நீக்கவோ செய்யலாம் ஏற்கனவே அரசுப் பணியில் உள்ள எந்த நபருக்கும் பயன் மறுக்கும் வகையில் விதிகள் மாற்றப்படவோ நீக்கப்படவோ கூடாது
(அ) அ.வி. 2 ✔ (ஆ) அ.வி. 6 (இ) அ.வி. 7 (ஈ) அ.வி. 5 அ

6. ஈட்டிய விடுப்பு உச்ச பட்ச சேமிப்பு 90 நாட்கள், 120 நாட்கள், 180 நாட்கள் என்பது 240 நாட்கள் இருப்பு வைக்கலாம் என அரசால் அறிவிக்கப்பட்டு நடைமுறைக்கு வந்த நாள்.
(அ) 31.3.1955 (ஆ) 31.3.1966 (இ) 30.10.1987 ✔ (ஈ) 31.3.1974

7. 1.3..2011 மு.ப. முதல் முறையாகப் பணி நியமனம் பெற்ற ஒரு அரசு ஊழியர் 1.8.2011 முதல் 30. 11. 2011 வரை மருத்துவச் சான்றின்றி அசாதாரண விடுப்பு துய்த்தால் அவரது அடுத்த ஆண்டிற்கான வளரூதிய நாள்
(அ) 1. 1. 2012 (ஆ) 1.5.2012 ✔ (இ) 1.4.2012 (ஈ) 1.7.2012

8. அறுதியிட்ட பயணப்படி பெற தகுதியான காலம்
(அ) பணியேற்பிடைக் காலம் (ஆ) ஈட்டிய விடுப்புக் காலம்
(இ) ஈட்டா விடுப்புக் காலம் (ஈ) தற்செயல் விடுப்புக் காலம் ✔

9. இடமாறுதலில் இருப்பூர்தியில் அழைத்துச் செல்லப்பட்ட அரசு ஊழியரின் 5 வயது மகனுக்கு தகுதியானது
(அ) 1/2 டிக்கட் + 1/2 தினப்படி + 1/2 நிர்ணயப்படி (ஆ) 1/2 தினப்படி மட்டும்
(இ) 1/2 தினப்படி + 1/2 டிக்கட் + முழு நிர்ணயப்படி (ஈ) 1/2 தினப்படி + முழு நிர்ணயப்படி ✔

10. ஒருவர் கட்டாயக் காத்திருப்பில் இருக்கும் போது இடம் மாறுதல் ஆணை கிடைத்தால் எந்த நாளிலிருந்து பணியேற்பிடைக்காலம் கணக்கிடப்படும்
(அ) ஆணை தேதி முதல் (ஆ) ஆணையின் தேதிக்கு அடுத்த நாள் முதல்
(இ) ஆணை அலுவலருக்கு சார்பு செய்த நாள் முதல் ✔ (ஈ) இதில் எதுவுமில்லை

11. இயற்கை இடர்பாடுகளால் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிக பட்சமாக ஒப்பளிப்பு செய்ய அதிகாரமுள்ள தொகை எவ்வளவு
(அ) ரூ. 20 லட்சம் வரை ✔ (ஆ) ரூ. 25 லட்சம் வரை
(இ) ரூ. 40 லட்சம் வரை (ஈ) ரூ.50 லட்சம் வரை

12. தலைமையிடத்தில் இருந்து முதல் 160 கிமீ. பயணித்த பின் மேற்கொள்ளப்படும் பயணங்களுக்கு இடை நிகழ்ச் செலவு வழங்க இருக்க வேண்டிய தூரம்
(அ) 90 கிமீ (ஆ) 160 கிமீ (இ) 320 கிமீ, (ஈ) தூரக்கணக்கு அவசியமில்லை ✔

13. 30 ஆண்டுகள் பணி முடித்த 55 ஆண்டு வயதை அடைந்த ஒரு உயர் பணி அலுவலருக்கு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டால் வழங்கப்படும் சிறப்பு உயர்வு காலம்
(அ) 5 ஆண்டுகள் (ஆ) 3 ஆண்டுகள் (இ) 4 ஆண்டுகள் (ஈ) தகுதியில்லை ✔

14. விடுப்புக்காலப் பயணச்சலுகைக்கான கேட்புரிமையை சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு பயணம் நிறைவுற்ற நாளிலிருந்து
(அ) ஒரு மாதம் ✔ (ஆ) 3 மாதங்கள் (இ) 6 மாதங்கள் (ஈ) கால வரம்பில்லை

15. மாறுதலில் உள்ள அரசு அலுவலரின் பழைய தலைமையிடத்திற்கான அறுதியிட்ட பயணப்படி ரூ. 720/– , புதிய தலைமையித்திற்கான அறுதியிட்ட பயணப்படி ரூ. 520/– இடமாறுகால ஊதியத்திற்கு தகுதியானது
(அ) ரூ.720/– (ஆ) ரூ. 520/– (இ) தகுதியில்லை ✔ (ஈ) ரூ.620/–

16. கோவை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ள கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மாறுதல் செய்யப்பட்ட ஒரு அலுவலருக்கு தகுதியான பணியேற்பிடைக்காலம்
(அ) 6 நாட்கள் (ஆ) 7 நாட்கள் (இ) தகுதியில்லை (ஈ) ஒரு நாள் ✔

17. ஓய்வூதியம் என்பது ஒரு அரசு ஊழியர் ஓய்வு பெற்ற பின் மாதந்தோறும் வழங்கப்படுவதாகும். அவ்வாறு ஓய்வூதியம் பெறுவதற்கு குறைந்த பட்சம் பணி புரிந்த நிகர தகுதியான பணிக்காலம்
(அ) 1 ஆண்டு (ஆ) 30 ஆண்டுகள் (இ) வரையறை இல்லை (ஈ) 10 ஆண்டுகள் ✔

18. 20 நாட்கள் குறைந்த பட்சம் பயணம் மேற்கொண்டு அறுதியிட்ட பயணப்படி பெறும் ஒரு அலுவலர் அந்த மாதத்தில் 22 நாட்கள் பயணம் மேற்கொண்டார். அதில் 3 நாட்கள் அரசு ஊர்தியைப் பயன்படுத்தினால் பிடித்தம் செய்யப்பட வேண்டிய பயண நாட்கள்
(அ) ஒரு நாள் ✔ (ஆ) 2 நாட்கள் (இ) 3 நாட்கள் (ஈ) ஏதுமில்லை

19. கீழ்க்கண்ட தொகுப்பு ஆண்டுகளில் இருவழிப் பயணச்சலுகைக்கு உகந்த தொகுப்பு ஆண்டு
(அ) 1986 – 1989 (ஆ) 1992 – 1995 (இ) 2000 – 2003 (ஈ) 1997 – 2000 ✔

20. இறந்து போன அரசு ஊழியரின் குடும்பத்தில் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுடைய நபர்
(அ) விவாக ரத்து பெற்ற மகள் (ஆ) 25 வயது நிரம்பிய மகன்
(இ) திருமணமான மகள் (ஈ) 25 வயது நிரம்பாத மகன் ✔

பயிற்சியாளர் கையொப்பம்

அரசு அலுவலர் பயிற்சி நிலையம் பவானிசாகர்
இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்கள் சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி
கோவை மையம் – முதலாம் அணி
நிறைவுத் தேர்வு

கணக்கு – I ம் தாள் (புத்தகமின்றி)

நாள் 01.11.2011 — சுழல் எண்
நேரம் 10.00 – 10.15 முப — மதிப்பெண் – 10.

குறிப்பு – எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு ✓ செய்யவும்

---

1. அரசுப்பணியில் அமர்த்தப்படும் ஒவ்வொரு அரசு ஊழியரும் முதலில் உடற்தகுதிச் சான்றிதழை அட்டவணை 1(3) ல் குறிப்பிட்டுள்ள படிவத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
(அ) அவி 10 (ஆ) அ.வி. 11 (இ) அவி. 15 (ஈ) அவி 67

2. கீழ்க்கண்ட நிதியிலிருந்து சம்பளம் பெறுபவர்களுக்கு மட்டுமே அடிப்படை விதிகள் பொருந்தும்
(அ) அவசர நிதி (ஆ) ஒருங்கிணைந்த நிதி
(இ) ஒருங்கிணைந்த நிதியின் மீது சுமத்தப்பட்ட செலவினம் (ஈ) பொதுக்கணக்கு

3. தகுதிகாண் பருவத்திலுள்ள ஒரு அரசு ஊழியர் கணக்கில் 25 நாட்கள் ஈட்டிய விடுப்பு இருப்பில் உள்ள போது 8 நாட்கள் அனுபவிக்காத பணியேற்பிடைக்காலம் வரவு வைக்க ஆணையிடப் பட்டால் அவரது ஈட்டிய விடுப்பு இருப்பு கீழ்க்காணுமாறு இருக்கும்
(அ) 33 (ஆ) 25 + 8 (இ) 30 (ஈ) 30 + 3

4. 5 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு விடுப்பு கணக்கு திருத்தி அமைக்கும் முறை எந்த தேதி முதல் கிடையாது?
(அ) 30.06.1994 (ஆ) 01.07.1994 (இ) 01.01.1974 (ஈ) 04.09.1933

5. தமிழ்நாடு விடுப்பு விதிகள் உருவாக்கப்பட்டு அமுலுக்கு வந்த நாள்
(அ) 01.01.1922 (ஆ) 01.07.1994 (இ) 15.08.1947 (ஈ) 04.09.1933

6. ஊதிய உயர்வு கணக்கிட தகுதியற்ற காலம்
(அ) கீழ்நிலைப் பதவியின் பணிக்காலம் (ஆ) உயர் பதவியின் பணிக்காலம்
(இ) அயல்நாட்டில் பணிபுரிந்த காலம் (ஈ) பணியேற்பிடைக்காலம்

7. ஒப்படைப்பு விடுப்பு காலத்திற்கு தகுதியில்லா படி
(அ) வீட்டு வாடகைப் படி (ஆ) நகர ஈட்டுப் படி (இ) மருத்துவப் படி (ஈ) மலைவாழ் படி

8. இடமாறு காலத்திற்கு தகுதியற்ற படி
(அ) அகவிலைப் படி (ஆ) வீட்டு வாடகைப் படி (இ) மருத்துவப் படி (ஈ) அறுதியிட்ட பயணப்படி

9. திரள் விளைவுடன் 3 ஆண்டுகள் ஊதிய உயர்வு நிறுத்த ஆணையினால் நிதி இழப்பு ஏற்படும் காலம்
(அ) 3 ஆண்டுகள் (ஆ) ஓய்வு பெறும் வரை (இ) கீழ்ப்பணியில் மட்டும் (ஈ) ஏதுமில்லை

10. பெண் அரசு ஊழியருக்கான மகப்பேறு விடுப்பு எத்தனை குழந்தைகள் உயிடன் இருந்தால் தகுதியில்லை?
(அ) 2 குழந்தைகள் (ஆ) 3 குழந்தைகள் (இ) 1 குழந்தை (ஈ) வரையறையில்லை

11. "ஊதிய உயர்வு", "ஊதிய நிர்ணயம்" இவை எந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன
(அ) அடிப்படை விதிகள் (ஆ) கருவூல விதித் தொகுப்பு (இ) நிதி விதித் தொகுப்பு
(ஈ) சிறப்பு ஊதியம் மற்றும் இதர படிகள் தொடர்புடைய தொகுப்பு நூல்

12. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் முன் ஊதிய உயர்வு எண்ணிக்கை
(அ) 1 (ஆ) 2 (இ) 3 (ஈ) தகுதியில்லை

13. தூரப்படி வழங்க ஒரு நாளைக்கு அதிக பட்சம் வரையறுக்கப்பட்ட தொலைவு
(அ) 160 கிமீ (ஆ) 400 கிமீ (இ) 320 கிமீ (ஈ) 8 கிமீ

14. காணாமல்போன அரசு ஊழியர் எத்தனை வருடங்களுக்குப்பிறகு இறந்து விட்டதாக கருதப்படுவார்?
(அ) 2 வருடம் (ஆ) 5 வருடம் (இ) 7 வருடம் (ஈ) 10 வருடம்

15. ஊதியப் பட்டியல்கள் பாதுகாக்கப்பட வேண்டிய காலம்
(அ) 30 வருடம் (ஆ) 40 வருடம் (இ) 45 வருடம் (ஈ) 35 வருடம்

16. மாறுதல் பயணக்காலத்தில் இருக்கும் ஒருவருக்கு புதிய பதவிக்கு மாறுதல் வழங்கப்பட்டால் அவருக்கு தகுதியுள்ள பணியேற்பிடைக்காலம்
(அ) பயணக்காலம் மட்டும் (ஆ) தயாரிப்புக்காலம்
(இ) தயாரிப்பு + பயணக்காலம் (ஈ) தகுதியில்லை

17. ஓய்வூதியத்திற்கு தகுதியான காலம்
(அ) தொழில் பழகுநர் காலம் (ஆ) பகுதி நேரப் பணிக்காலம்
(இ) ஒப்பந்தப் பணிக்காலம் (ஈ) மருத்துவச்சான்றுடன் ஊதியமில்லா விடுப்பு

18. பட்டுவாடா ஆகாத (செலுத்தா பணம்) பணத்தை அரசுக் கணக்கில் திரும்பச் செலுத்த கால வரம்பு
(அ) 90 நாட்கள் (ஆ) 30 நாட்கள் (இ) 60 நாட்கள் (ஈ) 15 நாட்கள்

19. சில்லரைச் செலவினப்பட்டியல் தயாரிக்க வரையறுக்கப்பட்ட படிவம்
(அ) TNTC 40 (a) (ஆ) TNTC 40 ( ) (இ) TNTC 58 (ஈ) TNTC 52

20. மருத்துவக் குழுவின் பரிந்துரை தேவைப்படும் விடுப்பு விண்ணப்பத்தினை விண்ணப்பம் பெறப்பட்ட எத்தனை நாட்களுக்குள் மருத்துவக்குழுவிற்கு அனுப்ப வேண்டும்
(அ) 3 நாட்கள் (ஆ) 7 நாட்கள் (இ) 60 நாட்கள் (ஈ) கால வரம்பில்லை

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்
இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்கள் சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி
தூத்துக்குடி மையம் – நான்காம் அணி
நிறைவுத் தேர்வு

கணக்கு – I ம் தாள் (புத்தகமின்றி)

நாள் 12.11.2011 | சுழல் எண்
நேரம் 9.30 – 9.45 முப | மதிப்பெண் – 10

குறிப்பு – 1. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு √ செய்யவும்

---

1. உயர் கல்வி விடுப்பு அனுமதிக்க 'சி' மற்றும் 'டி' பிரிவு அலுவலர்கள் முடித்திருக்க வேண்டிய பணிக்காலம்
(அ) 3 ஆண்டுகள் (ஆ) 5 ஆண்டுகள் (இ) தகுதியில்லை (ஈ) வரையறையில்லை

2. அரசு ஊழியரின் முழு நேரமும் அரசின் முடிவில் இருப்பதால் அவர்களை எந்த வகையிலும் பணியமர்த்திக் கொள்ளலாம்
(அ) அவி 11 (ஆ) அவி 16 (இ) அவி 67 (ஈ) அவி15

3. பணி விதிகள் உருவாக்கப்படாத பணியிடங்களில் வழங்கத்தக்க அதிக பட்ச ஊதிய உயர்வுகளின் எண்ணிக்கை
(அ) மூன்று (ஆ) ஒன்று (இ) வரையறை இல்லை (ஈ) இரண்டு

4. ஒப்படைப்பு விடுப்புக்கு தகுதியில்லாத படி
(அ) மலைவாழ் படி (ஆ) மருத்துவப்படி (இ) வீட்டு வாடகைப்படி (ஈ) நகர ஈட்டுப்படி

5. ஐந்து ஆண்டுகள் பணி முடித்தவருக்கு ஈட்டிய விடுப்பு கணக்கு திருத்தியமைக்கும் முறை எந்த தேதிமுதல் கிடையாது
(அ) 1.1.1922 (ஆ) 4.9.1933 (இ) 1.7.1994 (ஈ) 30.6.1994

6. திறன் விளைவுடன் ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யப்பட்டால் பணப்பயன் தள்ளிப் போகும் காலம்
(அ) ஓராண்டிற்கு (ஆ) நிரந்தரமாக
(இ) குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் (ஈ) தண்டனை காலத்திற்கு

7. தேர்வு நிலை வழங்குவதற்கு தகுதியற்ற காலம்
(அ) உயர் பணியில் பணியாற்றிய காலம் (ஆ) சம ஊதியத்தில் பணியாற்றிய காலம்
(இ) தற்காலிக பணிக்காலம் (ஈ) மருத்துவச்சான்றின் பேரில் அசாதாரண விடுப்பு

8. இருவழிப் பயணச் சலுகை துவங்கிய ஆண்டு
(அ) 1989 – 92 (ஆ) 1985 – 88 (இ) 1993 – 96 (ஈ) 1981 – 84

9. இடமாறுதலில் அழைத்துச் செல்லப்படும் அரசு ஊழியரின் 8 வயது மகனுக்கு தகுதியானது
(அ) ½ தினப்படி + முழு நிர்ணயப்படி (ஆ) ½ தினப்படி + ½ டிக்கட் + முழு நிர்ணயப்படி
(இ) ½ தினப்படி + ½ நிர்ணயப்படி (ஈ) தினப்படி மட்டும்

10. பயணத்தின் போது இலவச உணவு வசதி மட்டும் வழங்கப்பட்டால் தினப்படி
(அ) 50 % (ஆ) 75 % (இ) 100 % (ஈ) 25 %

–2–

-2-

11. 465 கி.மீ. தூரம் இரயிலும் 55 கி.மீ. பேருந்திலும் மாறுதலின் பொருட்டு பயணம் செய்த அலுவலருக்கு தகுதியான பணியேற்பிடைக்காலம்
(அ) 8 நாட்கள் (ஆ) 3 நாட்கள் (இ) 9 நாட்கள் (ஈ) 7 நாட்கள்

12. ஓய்வூதியம் பெறுவதற்கு குறைந்த பட்சம் பணிபுரிந்த நிகர தகுதியான பணிக்காலம்
(அ) வரையறையில்லை (ஆ) 30 ஆண்டுகள் (இ) ஒரு ஆண்டு (ஈ) 10 ஆண்டுகள்

13. காணாமல் போன அரசு ஊழியரின் குடும்பத்தாருக்கு காணாமல் போனநாளிலிருந்து எத்தனை ஆண்டுகள் கடந்த பின்னர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி வழங்கப்படும்
(அ) 5 ஆண்டுகள் (ஆ) 2 ஆண்டுகள் (இ) 7 ஆண்டுகள் (ஈ) 1 ஆண்டு

14. ஊதியம் கோரும் பட்டியல் படிவம் எண்
(அ) TNTC 47 (ஆ) TNTC 58 (இ) TNTC 40 (ஈ) TNTC 42

15. இறுதியாக திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அறிக்கை அனுப்ப வேண்டிய மாதம்
(அ) மார்ச் (ஆ) சனவரி (இ) செப்டம்பர் (ஈ) ஆகஸ்ட்

16. அரசு ஊழியரின் பொது நலன் கருதி அரசுப்பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெற ஆணை வழங்கப்பட்ட அரசு ஊழியருக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச ஓய்வூதியத்தின் அளவு
(அ) ½ பாகம் (ஆ) ⅔ பாகம் (இ) முழுமையாக (ஈ) ⅓ பாகம்

17. அரசு ஊழியர் தனது பொது வருங்கால வைப்புநிதி சந்தா பிடித்தத் தொகையை கீழ்காணும் மாதத்தில் மட்டுமே குறைப்பு செய்யலாம்
(அ) மார்ச் மாத ஊதியத்தில் (ஆ) சனவரி மாத ஊதியத்தில் மட்டும்
(இ) எப்போது வேண்டுமானாலும் (ஈ) செப்டம்பர் மாத ஊதியத்தில் மட்டும்

18. இந்த செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு சட்ட மன்றத்தின் நிதிநிலை அறிக்கையில் ஒப்புதல் பெறப்படுவதில்லை.
(அ) பயணப்பட்டியல் (ஆ) உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம்
(இ) அரசு ஊழியர்களின் ஊதியம் (ஈ) மாவட்ட ஆட்சியர் ஊதியம்

19. மூன்றாண்டுகளுக்கு மேல் உள்ள நிலுவைக்கேட்புகளை ஒப்பளிப்பு செய்ய வேண்டியவர்
(அ) அரசு (ஆ) அலுவலகத் தலைவர்
(இ) அலுவலகத் தலைவருக்கு மேல் அலுவலர் (ஈ) துறைத்தலைவர்

20. ஈட்டிய விடுப்பு உச்ச பட்ச சேமிப்பு வரம்பு 240 நாட்கள் என்பது எந்த தேதி முதல் அமுலுக்கு வந்தது
(அ) 31.3.1974 (ஆ) 1.7.1994 (இ) 30.6.1994 (ஈ) 30.10.1987

பயிற்சியாளர் கையொப்பம்

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 177–வது அணி
நிறைவுத் தேர்வுகள்.

நாள் – 6.9.2011
நேரம்– 10.00–10.15

சுழல் எண்–
மதிப்பெண்– 10

<u>கணக்கு–முதல் தாள் (புத்தகமின்றி)</u>

குறிப்பு– அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு (✓) சரிக்குறியிட்டு இடவும்.

---

1. அரசுப் பணியில் உள்ள எந்த ஒரு நபருக்கும் பயன் மறுக்கும் வகையில் விதிகள் மாற்றப்படவோ, நீக்கப்படவோ கூடாது.
   அ) அ.வி.2   ஆ) அ.வி.5 (அ)   இ) அ.வி.9 (6)   ஈ) அ.வி. 45
2. அரசு ஊழியரின் முழு நேரமும் அரசின் முடிவில் இருப்பதால் அவர்களை எந்த வகையிலும் பணியமர்த்திக் கொள்ளலாம்.
   அ) அ.வி.67   ஆ) அ.வி. 15   இ) அ.வி.16   ஈ) அ.வி. 11
3. எத்தனை வருடம் முறையான பணிமுடித்த அடிப்படை பணியாளருக்கு முன்வரவு தகுதி உண்டு.
   அ) 1   ஆ) 2   இ) 3   ஈ) 5
4. பணியிலிருந்து நீக்கப்பட்ட ஒரு நபர் விலகல் நாளில் 240 நாட்களாக ஈட்டியவிடுப்பு இருப்பு வைத்துள்ளார். தகுதியுள்ள ஒப்படைப்பு நாட்கள்
   ✓அ) 240 நாட்கள்   ஆ) தகுதியில்லை   இ) 180 நாட்கள்   ஈ) 30 நாட்கள்
5. ஒரு பதவியில் ஊதிய ஏற்முறை திருத்தப்பட்டால் அல்லது மாற்றப்பட்டால் ஊதிய நிர்ணயம் செய்ய கண்டுபிடிக்க வேண்டிய விதி
   அ) அ.வி.27 து.வி. 4   ஆ) அ.வி. 22 து.வி.35   இ) அ.வி.22 (ஆ)
   ஈ) அ.வி.23
6. திரள் விளைவுடன் ஒத்தி வைக்கப்பட்ட ஊதிய உயர்வுக்கான பணப்பயன் தள்ளி போடும் காலம்.
   அ) குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்   ஆ) நிரந்தரமாக   இ) ஓராண்டிற்கு
   ஈ) தண்டனை காலத்திற்கு.
7. துய்க்காத பணியேற்பிடைக் காலத்தை விடுமுறை நாட்கள் நீங்கலாக உச்ச பட்சமாக 15 நாட்கள் வரை ஈட்டிய விடுப்பில் சேர்க்கும் நடைமுறை அமலுக்கு வந்த நாள்.
   அ) 1.7.1994   ஆ) 1.1.1974   இ) 4.9.33   ஈ) 21.3.1986
8. இடமாறுகாலம் என்பது
   அ) தயாரிப்பு காலம் மட்டும்   ஆ) பயண காலம் மட்டும்   இ) தயாரிப்பு காலம் + பயணகாலம்   ஈ) விடுப்பு காலம் சேர்த்து.
9. இந்த செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு சட்டமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டியதில்லை.
   அ) அரசுப்பணியாளர் சம்பளம்   ஆ) தொலைபேசிக் கட்டணம்   இ) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம்   ஈ) பயணப்படி

,,2,,

10. கொடுபடா பதிவேட்டில் வைக்கப்பட்டுள்ள பகிர்ந்தளிக்கப்படாத ஊதியம் எத்தனை நாட்கள் வரை அலுவலகத்தில் வைக்கலாம்?
அ) 30 நாட்கள் ஆ) 120 நாட்கள் இ) 90 நாட்கள் ஈ) 10 நாட்கள்.

11. பொதுசேமநலநிதி நிலுவையில் இருக்கும் காலம்
அ) 2 மாதம் ஆ) 6 மாதம் இ) 1 மாதம் ஈ) 3 மாதம்;

12. துணைச் செலவினங்களை கட்டுப்படுத்தும் முதன்மை கட்டுப்படுத்தும் அலுவலர்
அ) துறைத்தலைவர் ஆ) கருவூலம் மற்றும் கணக்குத் துறை இயக்குநர்
இ) மாவட்ட தலைமை அதிகாரி ஈ) மாநில கணக்காயர்

13. காணாமல் போன அரசு ஊழியரின் குடும்பத்தாருக்கு காணாமல்போன நாளிலிருந்து எத்தனை ஆண்டுகள் கடந்த பின்னர் சிறப்பு வருங்கால வைப்புநிதி வழங்கப்படும்.
அ) 1 ஆண்டு ஆ) 5 ஆண்டுகள் இ) 7 ஆண்டுகள் ஈ) 2 ஆண்டுகள்.

14. பணியிலிருந்து ஓய்வு பெற்று மூன்றாண்டுகளுக்குள் வணிகவரி தொடர்பான (அல்லது) தனி முறையிலான வேலை ஏற்றுக் கொள்வதற்கு அ மற்றும் ஆ பிரிவு அலுவலர்கள் அரசின் முன் அனுமதி பெற வேண்டும்.
அ) ஓ.வி. 45ல் (2) ஆ) ஓ.வி.10 இ) ஓ.வி. 43 (4) ஈ) ஓ.வி. 30

15. 8 கி.மீ. சுற்றளவுக்கு அதிகமாகாத எந்த பயணமும் பயணப்படிக்கு தகுதிபெறும் பயணமாக கருதப்படுவதில்லை.
அ) ப.ப.விதி 43 (ஆ) ஆ) ப.ப.விதி 6 இ) ப.ப. விதி 64 ஈ) ப.ப.விதி 4

16. இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை பெற குறைந்தபட்சம் பணி முடித்திருக்க வேண்டிய ஆண்டுகள்.
அ) 3 ஆ) 10 இ) 5 ஈ) 1

17. மரணமடைகின்ற அரசு அலுவலருக்கு குடும்பம் இல்லாமலும் வேறு வாரிசு நியமனம் செய்யாமலிருந்தால் பணிக்கொடை காலாவதியாகிவிடும்
அ) ஓ.வி.43 (1) ஆ) ஓ.வி. 47 இ) ஓ.வி.70(2) ஈ) ஓ.வி.46 (ஆ) (1)

18. நடப்பு நிதியாண்டின் திருத்திய மதிப்பீடு அனுப்ப வேண்டிய மாதம்
அ) அக்டோபர் ஆ) மார்ச் இ) ஆகஸ்ட் ஈ) சனவரி.

19. ஊதிய நிர்ணயம் செய்யும்போது கீழ்க்காணும் ஊதியம் நிர்ணயப்படி கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
அ) தனி ஊதியம் ஆ) சிறப்பு ஊதியம் இ) மதிப்பூதியம் ஈ) தர ஊதியம்

20. 5 ஆண்டுகள் பணி முடிக்காத ஒருவர் ஒரே தடவையில் எத்தனை நாட்கள் அசாதாரண விடுப்பு துய்க்கலாம்.
அ) 30 நாட்கள் ஆ) 180 நாட்கள் இ) 60 நாட்கள் ஈ) 90 நாட்கள்.

பரிட்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 176–வது அணி நிறைவுத்தேர்வுகள்.

நாள்– 4.7.2011.
நேரம்–10.00–10.15

மதிப்பெண்:– 10
சுழல் எண்:–

**கணக்கு–முதல் தாள் (புத்தகமின்றி)**

குறிப்பு– அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு சரிக்குறியிடு (√) இடவும்.

---

1. "அரசு ஊழியர் முழு நேரமும் அரசின் முடிவில் இருப்பதால்" அவர்களை எந்த வகையிலும் அரசு பணியமர்த்திக் கொள்ளலாம்.
   அ) அ.வி. 11 ஆ) அ.வி. 10 இ) அ.வி. 12 ஈ) அ.வி. 15
2. ஊதியமோ, விடுப்பு ஊதியமோ பெறாத தற்காலிக பணிநீக்கத்திலுள்ள ஒரு அரசு அலுவலருக்கு வழங்கப்படுவது
   அ) மதிப்பூதியம் ஆ) பிழைப்பூதியம் இ) சிறப்பூதியம் ஈ) தனி ஊதியம்.
3. 5 ஆண்டுகள் பணி நிறைவு செய்யாத தகுதிகாண் பருவம் முடித்த அடிப்படைப் பணியாளரது ஈட்டிய விடுப்பு கணக்கில் 25 நாட்கள் இருப்பு உள்ள நிலையில் அவருக்கு 8 நாட்கள் அனுபவிக்காத பணி ஏற்பிடைக் காலம் ஈட்டிய விடுப்பில் வரவு வைக்க ஆணையிடப்பட்டால் அவரது ஈட்டிய விடுப்பு இருப்பு
   அ) 33 ஆ) 25 + 8 இ) 30 ஈ) 30 +3
4. தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்கள் 2–ம் ஊதிய உயர்வு பெற பணி நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்குள் " தமிழ் தட்டச்சு (அ) தமிழ் சுருக்கெழுத்து" இவற்றில் குறைந்தது கீழ்நிலைத் தகுதியாவது பெற்றிட வேண்டும்.
   அ) 1 ஆண்டு ஆ) 3 ஆண்டு இ) வரையறை இல்லை ஈ) 2 ஆண்டு
5. பணியேற்பிடைக் காலம் அதிகபட்சம் 30 நாட்கள் வழங்கப்படும் சில சந்தர்ப்பங்களில் இதனை நீட்டித்து" 30 நாட்களுக்கு மேலும்' அனுமதிக்க தகுதி பெற்றவர்.
   அ) துறைத் தலைவர் ஆ) மாநிலக் கணக்காயர் இ) சம்பளக் கணக்கு அலுவலர் ஈ). அரசு
6. பணியிறக்கத்திற்கு பின் மறு பதவி உயர்வு பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அ.வி. 22 (ஆ) ன்படி ஊதியம் நிர்ணயம் செய்யலாம். ஆனால் அவர் பதவியிறக்கம் பெறாமல் தொடர்ந்து அதே பதவியில் இருந்திருப்பார் எனில் என்ன ஊதியம் பெறுவாரோ அதற்கு மிகையாகாமல் இருக்க வேண்டும்.
   அ) அ.வி. 22 (ஆ) துவி (6) ஆ) அ.வி.22 (ஆ) துவி (5)
   இ) அ.வி.22 (ஆ) துவி (4) ஈ) அ.வி.23 (அ)
7. " பயணப்படி விதிகள்" குறித்து விளக்கப்பட்ட தொகுப்பு நூல் -
   அ) நிதி விதித் தொகுப்பு ஆ) கருவூல விதித் தொகுப்பு
   இ) சிறப்பூதியம் மற்றும் இதரப்படிகள் குறித்து தொகுப்பு நூல்
   ஈ) கணக்கு விதித் தொகுப்பு.

..2..

8. "கட்டுப்பாட்டு அலுவலரின் மேலொப்பமின்றி" பயணப்படி பட்டியலை காசாக்கும் தகுதி
அ) வருவாய் மாவட்டாட்சியர் ஆ) வருவாய் கோட்டாட்சியர் இ) துணை ஆட்சியர்
ஈ) மாவட்ட வருவாய் அலுவலர்.

9. கருச்சிதைவுக்கான மகப்பேறு விடுப்பு கருவுற்ற எத்தனை வார இடைவெளியில் கருச்சிதைவு ஏற்பட்டால் வழங்கப்படும்.
அ) 12–20 ஆ) 15–20 இ) 20–25 ஈ) வரையறையில்லை.

10. "ஈட்டியவிடுப்பு ஒப்படை" காலத்திற்கு தகுதியில்லா படி
அ) வீட்டு வாடகைப்படி ஆ) மருத்துவப்படி இ) மலைவாழ்படி ஈ) நகர ஈட்டுப்படி

11. விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் முன் ஊதிய உயர்வில் எத்தனை ஊதிய உயர்வினை கணக்கில் எடுத்துக் கொண்டு பதவி உயர்வின்போது ஊதியம் நிர்ணயம் செய்யலாம்?
அ) 3 ஆ) 2 இ) கணக்கில் கொள்ளலாகாது ஈ) 1

12. மாறுதலின் பொருட்டு 750 கி.மீ. தூரம் இருப்பூர்தியிலும் 125 கி.மீ பேருந்திலும் பயணம் செய்த அரசு ஊழியருக்கு வழங்கத்தக்க பணியேற்பிடைக் காலம்.
அ) 3 நாட்கள் ஆ) 7 நாட்கள் இ) 8 நாட்கள் ஈ) 9 நாட்கள்.

13. மூன்று மாதங்களுக்கு ஊதிய உயர்வினை "திறன் விளைவின்றி" தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாக 1.4.2010 அன்று ஆண்டு ஊதிய உயர்வு பெற்றவர் 2011–ஆம் ஆண்டுக்கு எந்த தேதியில் இயல்பான ஊதிய உயர்வு பெறுவார்?
அ) 1.1.2011 ஆ) 1.4.2011 இ) 1.7.2011 ஈ) 1.10.2011

14. 24 ஆண்டுகள் பணிமுடித்த 56 வயது நிறைவடைந்த உயர்பணி அலுவலருக்கு "கட்டாய ஓய்வு" வழங்கப்பட்டால் அவருக்கு வழங்கத்தக்க சிறப்பு உயர்வு காலம்
அ) 2 ஆண்டுகள் ஆ) தகுதியில்லை இ) 4 ஆண்டுகள் ஈ) 6 ஆண்டுகள்.

15. "விடுப்பு காலப் பயணச் சலுகை" அனுபவிக்க அரசு ஊழியர் பணியாற்றும் இடத்திலிருந்து பயணிக்க வேண்டிய குறைந்தபட்ச தூரம்.
அ) 8 கி.மீ. ஆ) 400 கி.மீ. இ) 160 கி.மீ. ஈ) 800 கி.மீ.

16. மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட "நிலுவைக் கேட்புகளை" ஒப்பளிப்புச் செய்ய வேண்டிய அலுவலர்.
அ) அலுவலகத் தலைவர் ஆ) கருவூல அலுவலர் இ) மாநிலக் கணக்காயர்
ஈ) துறைத் தலைவர்.

17. சில்லரைச் செலவினத்திற்கான பட்டியல் படிவம் எண்.
அ) TNTC 58 ஆ) TNTC 52 இ) TNTC 47 ஈ) TNTC 40 (a)

18. இடமாறுதலில் அலுவலரின் 2 வயது குழந்தைக்கு அனுமதிக்கத்தக்கது
அ) தினப்படி + நிர்ணயப்படி ஆ) அரை தினப்படி இ) நிர்ணயப்படி+அரைதினப்படி
ஈ) எதுவுமில்லை.

19. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் வழங்கல் கருதப்படும் வகை
அ) ஒதுங்கிவழங்க இசை ஆ) எதிர்பாராச்செலவினம் இ) சுமத்தப்பட்ட செலவினம்
ஈ) வைப்புகளுக்கு

20. நிலை முன்பணம் அதிகபட்சம் மாதத்தில் எத்தனை முறை காசாக்கலாம்?
அ) 1 முறை ஆ) 3 முறை இ) வரையறை இல்லை ஈ) 2 முறை

பயிற்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 175-வது அணி
நிறைவுத் தேர்வுகள்.

நாள் – 30.4.2011 மதிப்பெண்–10
நேரம் –10.00–10.15

<u>கணக்கு–முதல் தாள்(புத்தகமின்றி)</u>

குறிப்பு – அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.
சரியான விடையை தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு (✓) சரிக்குறியீடு இடவும்.

---

1. மதிப்பூதியம் எந்த நிதியிலிருந்து வழங்கப்படுகிறது?
அ) அவசரநிதி ஆ) பொதுக்கணக்கு இ) ஒருங்கிணைந்த நிதியின் மீது சுமத்தப்பட்ட செலவினம் ஈ) <u>ஒருங்கிணைந்த நிதி</u>
2. எந்த தேதி முதல் ஈட்டிய விடுப்பு மறு கணக்கீடு முறை கிடையாது.
அ) 1.1.1974 ஆ) 30.6.1994 இ) ✓<u>1.7.1994</u> ஈ) 1.1.1922.
3. அ.வி.18–ன்படி 5 ஆண்டுகள் பணி முடிக்காத ஒரு உயர் பணி அரசு ஊழியருக்கு ஒரே தடவையில் அனுபவிக்கத்தக்க அசாதாரண விடுப்பு
அ) 1 வருடம் ஆ) ✓<u>180 நாட்கள்</u> இ) தகுதியில்லை ஈ) வரையறையில்லை.
4. அடிப்படை விதிகள் உருவாக்கப்பட்ட நாள்.
அ) 1.1.1932 ஆ) ✓<u>1.1.1922</u> இ) 1.3.1922 ஈ) 1.6.1932
5. 450 கி.மீ. இரயிலில் பணி மாறுதலின் பொருட்டு பயணம் செய்த அரசு அலுவலருக்கு தகுதியுள்ள பயண நாட்கள்
அ) 3 நாட்கள் ஆ) ✓<u>2 நாட்கள்</u> இ) 4 நாட்கள் ஈ) 5 நாட்கள்.
6. ஒப்படைப்பு விடுப்புக்கான விண்ணப்பம் பெறப்பட்ட எத்தனை நாட்களுக்குள் விடுப்பூதியம் வழங்கப்படல் வேண்டும்?
அ) 30 நாட்கள் ஆ) 10 நாட்கள் இ) ✓<u>45 நாட்கள்</u> ஈ) வரையறை இல்லை.
7. தேக்கநிலை ஊதிய உயர்வு ஒருவர் கடைசியாகப் பெற்ற ஊதியத் தொகுப்பில் 2 ஆண்டுக்கு ஒரு ஊதிய உயர்வு எந்தவித வரையறையுமின்றி எந்த தேதி முதல் வழங்கப்படுகிறது?
அ) ✓<u>1.1.2006</u> ஆ) 1.1.2009 இ) 10.6.98 ஈ) 1.1.1974.
8. திறன் விளைவுடன் 3 ஆண்டுகள் ஊதிய நிறுத்த ஆணையினால் நிதி இழப்பு ஏற்படும் காலம்
அ) 3 ஆண்டுகள் ஆ) ✓<u>ஓய்வு பெறும் வரை</u> இ) கீழ்பணியில் மட்டும் ஈ) ஏதுமில்லை.
9. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவருக்கு எத்தனை ஊதிய உயர்வு வழங்கலாம்.
அ) ✓<u>1</u> ஆ) 2 இ) 3 ஈ) 4
10. பயணத்தின்போது இலவச உணவு, உறையுள் வழங்கப்பட்டால் தினப்படி தகுதி
அ) <u>25%</u> ✓ ஆ) 50 % இ) 75% ஈ) 100 %
11. தன்விருப்ப ஓய்வூதியம்–ஓய்வூதிய விதி எண்——ன் படி அனுமதிக்கப்படுகிறது?
அ) ஓ.வி.39 ஆ) <u>ஓ.வி.42</u> இ) ஓ.வி.36 ஈ) ஓ.வி.38

..2..

12. 1.4.2003க்கு பின்பு பணிக்கால ஓய்வுதியத்தில் எத்தனை விழுக்காட்டிற்கு மிகாமல் ஓய்வூதியத்தை ஒப்படைக்கலாம்.

அ) 30 % ஆ) 33 1/3 % இ) 40 % ஈ) 50 %

13. ஓய்வு பெற்ற நாளிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்குள் ஒரு அரசு ஊழியர் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்தாருக்கு எஞ்சிய பணிக்கொடை வழங்கலாம்.

அ) 3 ஆண்டுகள் ஆ) 5 ஆண்டுகள் இ) 10 ஆண்டுகள் ஈ) 7 ஆண்டுகள்.

14. பொது சேமநலநிதி தற்காலிக முன்பணம் ஒப்பளிப்பு ஆணை அமலில் இருக்கும் கால வரையறை

அ) 3 மாதங்கள் ஆ) மார்ச்சு 31 வரை இ) 6 மாதங்கள் ஈ) 1 ஆண்டு.

15. இறுதியாக திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அறிக்கை அனுப்பப்பட வேண்டிய மாதம்

அ) ஆகஸ்ட் ஆ) செப்டம்பர் இ) மார்ச் ஈ) சனவரி.

16. இயற்கை இடர்பாடுகளுக்கு நிவாரணம் வழங்க ஒப்பளிப்பு செய்ய வட்டாட்சியருக்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பளித்தொகை அளவு

அ) 3 லட்சம் வரை ஆ) 2 லட்சம் வரை இ) 20 லட்சம் வரை ஈ)வரையறையில்லை.

17. பொது க்கணக்கு குழுவை அமைக்க தகுதி

அ) ஆளுநர் ஆ) அரசு இ) சட்டமன்றம் ஈ) பாராளுமன்றம்.

18. கீழ்க்கண்ட தொகுப்பாண்டுகளில் இருவழிப்பயணச் சலுகைக்கு உகந்த தொகுப்பு ஆண்டினை கண்டறிக.

அ) 2002–2006 ஆ) 1990–1993 இ) 2006–2009 ஈ) 2009–2012.

19. பணியேற்பிடைக்காலம் கணக்கிடுவதற்கு அடிப்படை விதி என்ன ?

அ) அவி 101 (அ) ஆ) அவி 105 (அ) இ) அ.வி.106 ஈ) அ.வி.67

20. அலுவல் பயண முன்பணம் பெறப்படும் படிவம் என்ன.

அ) MTC 40 (a) ஆ) MTC 40 (A) இ) MTC 22 ஈ) MTC 58.

பயிற்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 172–வது அணி நிறைவுத் தேர்வுகள்.

நாள்– 15.10.2010
நேரம்– 10.00–10.15

சுழல் எண்–
மதிப்பெண்– 10

கணக்கு முதல் தாள் – புத்தகமின்றி

குறிப்பு – 1. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.
2. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து கருப்பு அல்லது நீல மையினால் அடிக்கோடிட்டு சரிக்குறியீடு (√) இடவும்.

---

1. அடிப்படை விதி –இவ்விதிகளை அரசு திருத்தும் போது ஒருவர் ஏற்கனவே பெற்று வந்த பயனைவிட குறைவான பயனளிடும் படி திருத்தக்கூடாது?
அ) அ.வி. 2 ஆ) அ.வி.5(அ) ✓ இ) அ.வி.6 ஈ) அ.வி. 11
2. ஒரு அரசு ஊழியருக்கு ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலோ (அ) இடையிடையே ஏற்படும் நிகழ்வுகளிலோ சிறப்பு பணி புரிந்ததற்காக தொடர்ச்சியாகவோ அல்லது தொடர்ச்சியாக அல்லாமலோ மத்திய (அ) மாநில அரசின் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து ஊதியமாக வழங்கப்படும் தொகை
அ) சிறப்பூதியம் ஆ) மதிப்பூதியம் இ) தொகுப்பூதியம் ஈ) பிழைப்பூதியம்
3. அரசு ஊழியரின் முழுநேரமும் அரசின் முடிவில் இருப்பதால் அவர்களை எந்த வகையிலும் அரசு பணியமர்த்திக் கொள்ளலாம்.
அ) அ.வி.67 ஆ) அ.வி.11 இ) அ.வி. 15 ஈ) அ.வி. 16
4. 5 ஆண்டுகள் பணி முடித்தவருக்கு விடுப்பு கணக்கு திருத்தி அமைக்கும் முறை (Recasting) எந்த தேதி முதல் கிடையாது?
அ) 30.6.94 ஆ) 1.7.1994 இ) 4.9.1933 ஈ) 1.1.1922.
5. ஊதிய உயர்வுகள் காலாண்டுக்கு முன்னிலைப் படுத்தும் வசதி நடைமுறைக்கு வந்த நாள்
அ) 1.7.1994 ஆ) 1.1.1974 இ) 30.10.1987 ஈ) 1.7.1974
6. அறுதியிட்ட பயணப்படி பெறும் ஒரு அலுவலர் தனக்கு வரையறுக்கப்பட்ட எல்லையைக் கடந்து பயணம் செய்ய நேரிடும்போது அதற்கான பயணப்படி பெறுகிறார். அவ்வாறு பயணப்படி கோரும் ஒவ்வொரு நாளுக்கும் அறுதியிட்ட பயணப்படியை, பயணப்படி பட்டியலில் கீழ்க்காணும் வீதத்தில் குறைப்பு செய்ய வேண்டும்.
அ) 1/25 ஆ) 1/30 இ) 1/50 ஈ) 1/75
7. பயணத்தின்போது இலவச உணவு வசதிமட்டும் வழங்கப்பட்டால் தினப்படி
அ) 25% ஆ) 50 % இ) 75 % ஈ) 100 %
8. திருத்திய ஆணைகளின்படி விடுப்பு காலம் பயணச்சலுகை அனுபவிக்கும் அரசு ஊழியர்கள் அவர்களது இருவழிப் பயணத்திற்கான கட்டணங்களை செலவு செய்து ஈடு செய்து கொள்ளலாம் எனும் நடைமுறை அமலுக்கு வந்த ஆண்டு
அ) 1981 ஆ) 1985 இ) 1992 ஈ) 1983
9. ஓய்வூதியம் என்பது ஒரு அரசு ஊழியர் ஓய்வு பெற்ற பின் மாதந்தோறும் வழங்கப் படுவதாகும். அவ்வாறு ஓய்வூதியம் பெறுவதற்கு குறைந்தபட்சம் பணிபுரிந்த நிகர தகுதியான பணிக்காலம்
அ) 1 ஆண்டு ஆ) 10 ஆண்டுகள் இ) 30 ஆண்டுகள் ஈ) வரையறை இல்லை.

..2..

10. ஈட்டிய விடுப்பு உச்சபட்ச சேமிப்பு வரம்பு 240 நாட்கள் என்பது எந்த தேதிமுதல் அமுலுக்கு வந்தது.
அ) 1.7.1994 ஆ) 30.10.1987 இ) 31.3.1974 ஈ) 30.6.1994.

11. 8 கிமீ. சுற்றளவுக்கு (Radious) அதிகமாகாத எந்த பயணமும் பயணப்படிக்கு தகுதி பெறும் பயணமாகக் கருதப்படுவதில்லை.
அ) பப. விதி 64 ஆ) பப.விதி 43 (ஆ) இ) பப.விதி 41 ஈ) பப விதி 6

12. 31.7.2006 முதல் முழு ஓய்வூதியம் பெற நிகர தகுதியான பணிக்காலம்
அ) 60 அரை ஆண்டுகள் ஆ) 66 அரையாண்டுகள் இ) 10 ஆண்டுகள்
ஈ) 1 ஆண்டு

13. இடமாற்றத்தால் இருப்பிடம் மாறாத நிலை ஏற்படினும் வழங்கப்படும் பணி ஏற்பிடைக் காலம்.
அ) 6 நாட்கள் ஆ) 2 நாட்கள் இ) ஒரு நாள் ஈ) தகுதியில்லை.

14. ஊதிய நிர்ணயம் செய்யும்போது கீழ்க்காணும் ஊதியம் நிர்ணயிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.
அ) தர ஊதியம் ஆ) தனி ஊதியம் இ) சிறப்பூதியம் ஈ) பகிப்படியும்.

15. மாற்றப்பட்ட அரசு ஊழியர் புதிய இடத்தில் பணியேற்ற நாளிலிருந்து எத்தனை மாத காலத்திற்குள் அவரது குடும்ப உறுப்பினர்கள் பயணம் மேற்கொள்ளலாம்.
அ) 1 மாத காலம் ஆ) 3 மாத காலம் இ) 6 மாத காலம் ஈ) 1 ஆண்டுகள்.

16. காணாமல் போன அரசு ஊழியரின் குடும்பத்தாருக்கு காணாமல் போன நாளிலிருந்து எத்தனை ஆண்டுகள் கடந்த பின்னர் சிறப்பு வருங்கால வைப்பு நிதி வழங்கப்படும்
அ) 7 ஆண்டுகள் ஆ) 5 ஆண்டுகள் இ) இரண்டு ஆண்டுகள் ஈ) 1 ஆண்டு

17. 10 ஆண்டுகள் அல்லது 20 அரை ஆண்டுகளுக்கு குறைவான நிகர தகுதி பெறும் பணிக்காலம் உள்ள அரசு ஊழியருக்கு வழங்கப்படுவது.
அ) இறப்பு (ம) ஓய்வுப் பணிக்கொடை ஆ) இறப்பு பணிக்கொடை
இ) பணிக்கொடை ஈ) எஞ்சிய பணிக்கொடை

18. மூன்றாண்டுகளுக்குள் மேல் உள்ள நிலுவைகளை ஒப்பளிப்பு செய்ய வேண்டியவர்
அ) அலுவலகத் தலைவர் ஆ) அலுவலகத் தலைவருக்கு மேல் உள்ள அலுவலர்
இ) துறைத் தலைவர் ஈ) அரசு

19. அனுபவிக்காத பணியேற்பிடைக் காலத்தை விடுமுறை நாட்கள் நீங்கலாக உச்ச பட்சமாக 15 நாட்கள் வரை ஈட்டிய விடுப்பில் சேர்க்கும் நடைமுறை அமலுக்கு வந்த நாள்
அ) 4.9.1933 ஆ) 1.7.1994 இ) 1.1.1974 ஈ) 21.3.1986.

20. அரசு ஊழியரை பொதுநலன் கருதி அரசுப் பணியிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெற ஆணை வழங்கப்பட்ட அரசு ஊழியருக்கு வழங்கப்பட வேண்டிய குறைந்த பட்ச ஓய்வூதியத்தின் அளவு
அ) முழுமையாக ஆ) 1/2 பாகம் இ) 1/3 பாகம் ஈ) 2/3 பாகம்.

பயிற்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 171-வது அணி நிறைவுத் தேர்வுகள்.

நாள் – 13.8.2010
நேரம் – 10.00-10.15 முப

சுழல் எண்–
மதிப்பெண்– 10

கணக்கு –முதல் தாள் –புத்தகமின்றி

குறிப்பு– 1. எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.
2. சரியான விடையை தேர்ந்தெடுத்து கருப்பு அல்லது நீல மையினால் அடிக்கோடிட்டு சரிக்குறியீடு (√) இடவும்.

1. அரசுப் பணியாளர் விடுப்பு பெறுவதை ஒரு உரிமையாக கோர இயலாது.
அ) அடிப்படை விதி 67 ஆ) அடிப்படை விதி 105 இ) அடிப்படை விதி 10
ஈ) அடிப்படை விதி 101 (அ)
2. அயல்நாட்டில் பணிபுரிவதற்கான விடுப்பு அதிகபட்சமாக எவ்வளவு காலம்
அ) 5 ஆண்டுகள் ஆ) 3 ஆண்டுகள் இ) 24 மாதங்கள் ஈ) 28 மாதங்கள்
3. அடிப்படை பணியில் எத்தனை ஆண்டுகள் முறையான பணி முடித்தால் சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு தகுதி உண்டு?
அ) 20 ஆண்டுகள் ஆ) 10 ஆண்டுகள் இ) 5 ஆண்டுகள் ஈ) 15 ஆண்டுகள்
4. தற்காலிக பணிநீக்கத்தில் உள்ள ஒரு அலுவலர் எந்த வகையான விடுப்பு எடுக்க தகுதியுண்டு?
அ) ஈட்டிய விடுப்பு ஆ) மருத்துவ சான்றிலான ஈட்டா விடுப்பு இ) சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு ஈ) ஏதுமில்லை.
5. 240+15 நாட்கள் ஈட்டிய விடுப்பு இருப்பு வைத்துள்ள ஒரு அலுவலர் ஒரே நேரத்தில் அனுபவிக்கத்தக்க ஈட்டிய விடுப்பு
அ) 255 நாட்கள் ஆ) 240 நாட்கள் இ) 180 நாட்கள் ஈ) 90 நாட்கள்.
6. விடுப்பு கால பயணச் சலுகைக்கான கேட்புரிமையை சமர்ப்பிக்க வேண்டிய கால அளவு– பயணம் நிறைவுற்ற நாளிலிருந்து
அ) ஒரு மாதம் ஆ) 3 மாதங்கள் இ) 6 மாதங்கள் ஈ) கால வரம்பில்லை.
7. ஈரோடு வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து 2 கிமீ தொலைவில் உள்ள ஈரோடு மாவட்ட ஆட்சியரகத்திற்கு மாறுதல் செய்யப்பட்ட ஒரு அலுவலருக்கு தகுதியுள்ள பணியேற்பிடைக் காலம்
அ) 6 நாட்கள் ஆ) 7 நாட்கள் இ) தகுதியில்லை ஈ) ஒரு நாள்
8. மாறுதலில் உள்ள அரசு அலுவலரின் பழைய தலைமையிடத்திற்கான அறுதியிட்ட பயணப்படி ரூ.600 புதிய தலைமையிடத்தில் ரூ.800, பணியேற்பிடைக்காலத்திற்கு தகுதியுள்ள அறுதியிட்ட பயணப்படித் தொகை
அ) ரூ.600 ஆ) ரூ.800 இ) ரூ.700 ஈ) தகுதியில்லை.
9. இட மாறுதலில் ரயிலில் அழைத்துச் செல்லப்பட்ட அரசு ஊழியரின் நான்கு வயது மகனுக்கு தகுதியானது
அ) 1/2 டிக்கெட் + 1/2 தினப்படி + 1/2 நிர்ணயப்படி
ஆ) 1/2 தினப்படி மட்டும் இ) 1/2 தினப்படி + 1/2 நிர்ணயப்படி
ஈ) 1/2 தினப்படி + முழு நிர்ணயப்படி

-2-

10. 12.2.2009 அன்று உயர்பதவியில் ஊதியம் நிர்ணயம் அ.வி. 22 (ஆ)ன்படி செய்யப்பட்ட அரசு ஊழியரின் அடுத்த ஊதிய உயர்வு வழங்க தகுதி நாள்

அ) 1.1.2010 ஆ) 1.2.2010 இ) 12.2.2010 ஈ) 13.2.2010

11. ஓராண்டுக்கு மேல் 3 ஆண்டுகளுக்கு உட்பட்ட நிலுவைப் பட்டிகளை ஒப்பளிப்பு செய்யும் அலுவலர்

அ) அலுவலகத் தலைவர் ஆ) துறைத் தலைவர் இ) அரசு

ஈ) அலுவலகத் தலைவருக்கு அடுத்த உயர் அலுவலர்.

12. ஒப்பாய்வு செய்கையில் கருவூல வவுச்சர் எண்களை அறியக் கூடிய படிவ எண்

அ) 52 ஆ) 58 இ) 100 ஈ) 10?

13. 1.4.1946–ஐ பிறந்த நாளாகக் கொண்ட ஒரு அலுவலர் ஓய்வு பெற்றபின்னர் 31.3.2006 அன்று காலமானார். அவரது குடும்பத்தாருக்கு வழங்கப்பட வேண்டிய குடும்ப ஓய்வூதியம் (உயர்த்தப்பட்டது) கால வரம்பு

அ) 31.3.2007 வரை ஆ) 31.3.2013 வரை இ) 31.3.2011 வரை

ஈ) கால வரம்பில்லை.

14. 53 வயதில் கட்டாய ஓய்வு பெற்ற ஒரு அலுவலருக்கு வழங்கக் கூடிய தகுதியான சிறப்பு உயர்வு காலம்

அ) 5 ஆண்டுகள் ஆ) 3 ஆண்டுகள் இ) தகுதியில்லை ஈ) வரம்பில்லை.

15. தமிழ் நாடு ஓய்வூதிய விதிகள் 1978–க்கு பதிலாக பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டம் அமலாக்கம் மாநில அரசுப் பணியில் எந்த தேதி முதல் நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பொருந்தும் ?

அ) 1.1.2003 ஆ) 1.4.2003 இ) 1.7.2003 ஈ) இவை ஏதுமில்லை.

16. அரசு அலுவலகத்தில் ஊதியம் மற்றும் பிற படிகளை கணக்கிட கீழ்க்கண்ட அறிக்கை அடிப்படை ஆனது ஆகும்.

அ) வரவு செலவு திட்ட அறிக்கை ஆ) திருத்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கை

இ) எண் அறிக்கை ஈ) ஊதியப் பட்டியல்.

17. ஆண்டு இறுதியில் செலவிடப்படாமல் உள்ள ரூ.2 லட்சத்தை காலாவதியாகாமல் இருக்க என்ன செய்யலாம்.

அ) பணமாக வாங்கி வைக்கலாம் ஆ) வைப்பு நிதிக்கு மாற்றலாம்

இ) சேமிப்பு கணக்கிற்கு மாற்றலாம் ஈ) காலாவதியாக விட்டுவிட வேண்டும்.

18. இந்த செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியது இல்லை.

அ) அரசு அலுவலர் ஊதியம் ஆ) பயணப்பட்டிகளுக்கான செலவு இ) மாவட்ட ஆட்சியரின் ஊதியம் ஈ) உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஊதியம்.

19. உள்ளூரில் அரசுக் கணக்கில் செலுத்தப்படும் தொகைக்கான செலானின் 3 பிரதிகளின் எந்த நகல் துறையின் மாவட்ட சரி பார்ப்பு அலுவலருக்கு வழங்கப்பட வேண்டும் ?

அ) முதல் பிரதி ஆ) இரண்டாம் பிரதி இ) மூன்றாம் பிரதி ஈ) ஏதுமில்லை.

20. தன் ஊதியம் பெறும் அலுவலரின் ஊதியப் பட்டியல் படிவம் எண்

அ) படிவம் எண். 42 ஆ) படிவம் எண் 47 இ) படிவம் எண் 41 C ஈ) படிவம் எண்–40

பயிற்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி
170வது அணி நிறைவுத் தேர்வுகள்.

நாள் – 8.6.2010.
நேரம் – 10.00–10.15

மதிப்பெண் – 10
சுழல் எண் –

<u>கணக்கு – முதல் தாள் (புத்தகமின்றி)</u>

குறிப்பு – அனைத்து கேள்விகளுக்கும் விடையளிக்கவும். சரியான விடையை தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு சரிக்குறியிடு ( √ ) இடவும்.

1. இரண்டு ஆண்டுக்கு மேல் ஐந்தாண்டு வரை உள்ள காலத்தில் முறைப்பணி முடித்த ஒரு உயர்பணி அலுவலர் அக்காலத்தில் எவ்வளவு நாள் அதிகபட்சமாக சாதாரண சூழ்நிலையில் உடல் நலக் குறைவின் காரணமாக மருத்துவ சான்றின் மீது ஈட்டா விடுப்பு எடுக்கலாம்?
   அ) 90 நாட்கள் ஆ) 180 நாட்கள் இ) 270 நாட்கள் ஈ) 540 நாட்கள்.
2. ஈட்டிய விடுப்பு முன்வரவு முறை எந்த தேதி முதல் அமலாக்கப்பட்டது?
   அ) 1.1.1922 ஆ) 4.9.1933 இ) 1.1.1974 ஈ) 1.7.1994
3. சிறப்பு இயலாமை விடுப்பு யாரால் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும்?
   அ) அலுவலக தலைவர் ஆ) மாவட்ட அலுவலர் இ) மண்டல அலுவலர் ஈ) துறைத் தலைவர்.
4. உயர்கல்வி விடுப்பு வழங்க அங்கீகரிக்கப்படும் விதி எண் என்ன?
   அ) த.நா.வி. விதி 13 ஆ) த.நா.வி.விதி 15 இ) அ.வி. 18 ஈ) அ.வி.84
5. சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பு 14 ஆண்டுகள் முறையான பணி முடித்த அடிப்படைப் பணியாளர் 15–வது ஆண்டில் ஒரே தடவையில் எத்தனை நாட்கள் அதிகபட்சமாக எடுக்கலாம்?
   அ) 90 நாட்கள் ஆ) 140 நாட்கள் இ) 180 நாட்கள் ஈ) தகுதியில்லை.
6. ஊதிய உயர்வுக்கு தகுதியுள்ள பணிக்காலம் எது?
   அ) மருத்துவ சான்று இன்றி அசாதாரண விடுப்பு. ஆ) உயர்கல்வி விடுப்பு.
   இ) பணித் தடை ஈ) அயல் நாட்டில் பணிபுரிவதற்காக எடுத்த விடுப்பு.
7. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற அலுவலருக்கு எத்தனை முன் ஊதிய உயர்வு வழங்கலாம்?
   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) தகுதியில்லை.
8. ஒரு அலுவலருக்கு 1.1.2008–ல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வு திறன் விளைவுடன் ஊதிய உயர்வு 5 மாதம் தள்ளி வைத்தால் 1.6.2008–ல் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது. அவரது அடுத்த இயல்பான ஊதிய உயர்வு நாள் எது?
   அ) 1.6.2009 ஆ) 1.4.2009 இ) 1.1.2009 ஈ) எதுவுமில்லை.
9. பணியேற்பிடைக் காலம் அனுமதிக்கும் விதி யாது?
   அ) அ.வி. 23 அ ஆ) அ.வி. 84 இ) அ.வி.101 (அ) ஈ) அ.வி. 105 & 106·
10. அலுவலக பயணத்தின் போது இலவச உணவு உறையுள் வழங்கினால் தினப்படியில் எத்தனை சதவீதம் வழங்கப்படும்?
   அ) 25 % ஆ) 30% இ) 70 % ஈ) 100%

..2..

11. நிர்ணயப்படி எந்த தேதி முதல் அமலுக்கு வந்தது?
அ) 4.9.1933 ஆ) 1.10.1978 இ) 30.10.1987 ஈ) 1.6.2009.

12. நிலையான முன்பணத்தில் அலுவலக சில்லறை செலவினத்தை அதிகபட்சமாக மாதம் எத்தனை முறை பட்டியலிட்டு சரி கட்டிக் கொள்ளலாம்?
அ) ஒரு முறை ஆ) இரண்டு முறை இ) நான்கு முறை ஈ) எதுவும் இல்லை.

13. எந்த மாதத்தில் பணியாளரின் எண்ணிக்கை அரசின் நிதித்துறைக்கு சமர்ப்பிக்க வேண்டும்?
அ) ஆகஸ்டு ஆ) அக்டோபர் இ) சனவரி ஈ) மார்ச்.

14. எந்த அலுவலருக்கு மாதத்தின் கடைசி வேலை நாள் வரை காத்திராமல் பணிக்காலத்திற்கு ஊதியம் வழங்கலாம்?
அ) மருத்துவ விடுப்பில் சென்றுள்ளவர்களுக்கு
ஆ) சொந்த அலுவல் பேரில் ஈட்டா விடுப்பில் சென்றவருக்கு.
இ) அயற்பணிக்கு பணிவிடுவிக்கப்பட்டவருக்கு
ஈ) இதில் எவரும் இல்லை.

15. கருவூலத்தில் பட்டியினை கொடுக்கும் முன் தொலைந்து போன பட்டியலுக்கு யாரால் பட்டி காசாக்கப்பட வில்லை என்ற சான்று வழங்கப்பட வேண்டும்?
அ) அலுவலக தலைவரால் ஆ) அலுவலக காசாளரால்
இ) வங்கி மேலாளரால் ஈ) உரிய கருவூல அலுவலரால்.

16. மாறுதல் பயணப்படியில் அலுவலரை முற்றிலும் சார்ந்த தாயாருக்கு அனுமதிக்கப்படும் செலவினங்கள் யாவை?
அ) பயணக் கட்டணம், தினப்படி, இடை நிகழ்வு செலவு, நிர்ணயப்படி
ஆ) பயணக் கட்டணம், தினப்படி, நிர்ணயப்படி
இ) பயணக் கட்டணம், தினப்படி ஈ) பயணக் கட்டணம் மட்டும்.

17. சாதாரண குடும்ப ஓய்வூதியம் 1.1.2006 முதல் குறைந்த பட்ச அளவு அனுமதிக்கப்படும் தொகை எவ்வளவு?
அ) 3050 ஆ) 23100 இ) 38500 ஈ) இதில் எதுவுமில்லை.

18. பொதுக்கணக்கு குழு யாரால் அமைக்கப்படுகிறது?
அ) தமிழ்நாடு தேர்வாணையத்தால் ஆ) தமிழ்நாடு அரசு செயலகத்தால்
இ) மாநில சட்ட மன்றத்தால் ஈ) இதில் எதுவுமில்லை.

19. தன் விருப்ப ஓய்வு ஊதியம் எந்த விதியின்கீழ் அனுமதிக்கப்படுகிறது?
அ) ஓ.வி. 32 ஆ) ஓ.வி. 36 இ) ஓ.வி. 42 ஈ) ஓ.வி. 39

20. நிலை–III-ல் உள்ள தர ஊதியம் பெறும் அலுவலர்கள் 60 கி.மீ. மேல் மாறுதல் செய்யப்பட்டால் அனுமதிக்கப்படும் ஒட்டு மொத்த படித் தொகை எவ்வளவு?
அ) ரூ.450 ஆ) ரூ.525 இ) ரூ.675 ஈ) ரூ.975

பயிற்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர் உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 169–வது அணி
நிறைவுத் தேர்வுகள்.

நாள்– 5.4.2010 | சுழல் எண் –
நேரம்– மு.ப. 10.00–10.15 மு.ப. | மதிப்பெண்– 10

**கணக்கு–முதல் தாள்– புத்தகமின்றி.**

குறிப்பு– 1. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
2. சரியான விடையை தேர்ந்தெடுத்து அடிக்கோடிட்டு (√) குறியீடு செய்யவும்.

---

1. தகுதிகாண் பருவம் முடித்த ஒரு உயர்பணி அலுவலர் 160 நாட்கள் அசாதாரண விடுப்பில் சென்றதால் எதிர் வரும் அரை ஆண்டு ஈட்டிய விடுப்பு முன்வரவில் எவ்வளவு நாட்களை கழிக்க வேண்டும்?
அ) 16 நாட்கள் ஆ) 15 நாட்கள் இ) 8 நாட்கள் ஈ) 10 நாட்கள்.
2. எந்த தேதி முதல் அடிப்படை விதிகள் அமுலுக்கு வந்தன?
அ) 1.1.1922 ஆ) 1.7.1994 இ) 1.1.1974 ஈ) 4.9.1933.
3. ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்யும் நிகழ்வுகளில் ஒப்படைப்பு நாளுக்கு பின்னர் அதிகபட்சமாக எத்தனை நாட்களுக்குள் விண்ணப்பம் கொடுக்கலாம்?
அ) 15 ஆ) 30 இ) 7 ஈ) வரையறை இல்லை.
4. மகப்பேறு விடுப்பு வழங்க அங்கீகரிக்கும் அடிப்படை விதி எண் எது?
அ) அ.வி. 18 ஆ) அ.வி. 84 இ) அ.வி. 83 ஈ) அ.வி 101 (அ)
5. ஐந்து ஆண்டுகளுக்கு மேல் பணி முடித்த அலுவலர் ஒரே தடவையில் ஒரு ஆண்டு வரை அசாதாரண விடுப்பு எடுக்க அங்கீகரிக்கும் விதி எது?
அ) த.நா.வி.வி. 13 ஆ) த.நா.வி.வி. 15 இ) அ.வி. 18 ஈ) அ.வி. 85
6. ஊதிய உயர்வு சான்றிதழ் படிவம் எண் எது?
அ) டி.என்.டி.சி. 42 ஆ) டி.என்.டி.சி.47 இ) டி.என்.டி.சி.49 ஈ) டி.என்.டி.சி.22
7. ஊதிய உயர்வுக்கு தகுதியில்லா காலம் எது?
அ) மருத்துவ சான்று மீது அசாதாரண விடுப்பு காலம் ஆ) அயல்நாட்டில் பணிபுரிவதற்கான விடுப்பு காலம் இ) சிறப்பு இயலாமை விடுப்பு
ஈ) மருத்துவ மனை விடுப்பு
8. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற அலுவலருக்கு எத்தனை முன் ஊதிய உயர்வு வழங்கப்படும்?
அ) 3 ஆ) 2 இ) 1 ஈ) தகுதியில்லை.
9. ஆறு மாதத்திற்கு ஊதிய உயர்வு திரள் விளைவின்றி தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாக 1.7.2009–ல் ஆண்டு ஊதிய உயர்வு பெற்றவர் 2010–ம் ஆண்டில் எந்த தேதி இயல்பான ஊதிய உயர்வு தேதியாகும்?
அ) 1.1.2010 ஆ) 1.4.2010 இ) 1.7.2010 ஈ) 1.10.2010
10. ஒருவர் கட்டாய காத்திருப்பில் இருக்கும்போது இடம் மாறுதல் ஆணை கிடைத்தால் எந்த நாளிலிருந்து பணியேற்பிடைக் காலம் கணக்கிடப்படும்?
அ) ஆணையின் தேதி முதல் ஆ) ஆணையின் தேதிக்கு அடுத்த நாள் முதல்
இ) ஆணை அலுவலருக்கு சார்பு செய்த நாள் முதல் ஈ) எதுவுமில்லை.

..2..

11. இட மாற்றம் அளிக்கும்போது அதிகபட்சமாக 30 நாட்கள் எந்த சூழ்நிலையின்கீழ் பணியேற்பிடைக் காலமாக அனுமதிக்கப்படும் ?
   அ) உடல் நிலை சரியில்லாத நிலையில் இடம் மாற்றம் செய்யும்போது
   ஆ) அரசு அலுவலர் வழக்கமான பயண வசதியினை பயன்படுத்த முடியாத நிலையில்
   இ) ஆறு மாதங்களுக்கு மேல் விடுப்பில் இருந்து விடுப்பு முடியும் நிலையில்
   ஈ) எதுவுமில்லை.

12. இட மாறு கால சம்பளத்திற்கு தகுதியில்லா இனம் எது ?
   அ) அகவிலைப் படி உயர்வு   ஆ) ஊதிய உயர்வு   இ) அறுதியிட்ட பயணப்படி
   ஈ) அனைத்து இனங்களும் தகுதியானவை.

13. அறுதியிட்ட பயணப்படி பெறும் அலுவலர் ,அரசு ஊர்தியை பயன்படுத்திய நாட்களுக்கு எந்த விகிதத்தின் அடிப்படையில் பிடித்தம் செய்ய வேண்டும் ?
   அ) 1/30 வீதம்   ஆ) 1/20 வீதம்   இ) 25/100 வீதம்   ஈ) 1/3 வீதம்.

14. அலுவல் பயணத்தின்போது இலவச உணவு மட்டும் வழங்கினால் தினப்படி எவ்வளவு சதவீதம் வழங்கப்படும் ?
   அ) 25 %   ஆ) 50 %   இ) 75 %   ஈ) 100%

15. மாறுதல் பயணப்படி பட்டியலில் அலுவலரின் 3 வயதிற்கும் குறைந்த குழந்தைக்கு அனுமதிக்கும் செலவு எது ?
   அ) பயணக்கட்டணம், தினப்படி, மட்டும் இடைநிகழ்வு செலவு
   ஆ) பயணக்கட்டணம் , தினப்படியில் பாதி மற்றும் நிர்ணயப்படி
   இ) தினப்படியில் பாதி மற்றும் நிர்ணயப்படி
   ஈ) தினப்படியில் பாதி மட்டும்.

16. வயது முதிர்வு ஓய்வூதியம் எந்த விதியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது ?
   அ) ஓ.வி. 32   ஆ) ஓ.வி. 36   இ) ஓ.வி. 43   ஈ) ஓ.வி. 66

17. இயற்கை இடர்பாடுகளால் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அதிகபட்சமாக ஒப்பளிப்பு செய்ய அதிகாரமுள்ள தொகை எவ்வளவு ?
   அ) 20 இலட்சம் வரை   ஆ) 25 இலட்சம் வரை   இ) 40 இலட்சம் வரை
   ஈ) 50 இலட்சம் வரை

18. இறுதியாக திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு அறிக்கை (FMA) அனுப்ப வேண்டிய மாதம் எது ?
   அ) சனவரி   ஆ) மார்ச்   இ) ஆகஸ்டு   ஈ) அக்டோபர்.

19. அரசு அலுவலகங்களுக்கு பொருள்கள் வாங்கும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் எந்த விதிதொகுப்பில் உள்ளது ?
   அ) கருவூல விதித் தொகுப்பு   ஆ) நிதி விதித் தொகுப்பு   இ) கணக்கு விதித் தொகுப்பு   ஈ) வரவு–செலவு கையேடு.

20. அவசர நிதி என்பது எந்த நிதியில் இருந்து முன்பணமாக பெறப்படுகிறது ?
   அ) ஒருங்கிணைந்த நிதி   ஆ) பொதுக்கணக்கு   இ) சமத்தப்பட்ட செலவினம்
   ஈ) வருவாய் செலவினம்.

பயிற்சியாளர் கையொப்பம்.

அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்.
இளநிலை உதவியாளர்/உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சி 168-வது அணி
நிறைவுத் தேர்வுகள்.

நாள் – 30.1.2010.
நேரம் – 10.00–10.15

சுழல் எண்-
மதிப்பெண் – 10

### கணக்கு – முதல் தாள் – (புத்தகமின்றி)

குறிப்பு – 1) எல்லா கேள்விகளுக்கும் விடையளிக்கவும்.
2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து கருப்பு (அல்லது) நீல மையினால் அடிக்கோடிட்டு டிக் செய்யவும்.

---

1. தமிழ்நாடு விடுப்பு விதிகள் தயாரிக்கப்பட்டு முதல் நடைமுறைக்கு வந்த நாள்
   அ) 1.1.1922 ஆ) 1.7.1994 இ) 4.9.1933 ஈ) 15.8.1947
2. அரசு ஊழியரின் முழு நேரமும் அரசின் முடிவில் இருப்பதால் அவர்களை எந்த வகையிலும் அரசு பணியமர்த்திக் கொள்ளலாம். அ.வி.
   அ) 67 ஆ) 11 இ) 15 ஈ) 10
3. ஊதிய உயர்வுக்கு தகுதியில்லாத காலம் ([illegible])
   அ) அயல் பணிக்காலம் ஆ) உயர் பதவியின் பணிக்காலம்
   இ) பணியேற்பிடைக் காலம் ஈ) கீழ்நிலைப் பதவியின் பதவிக் காலம்.
4. தகுதிகாண் பருவத்தில் 25 நாட்கள் ஈட்டிய விடுப்பு இருப்பில் உள்ள ஒரு அரசு ஊழியருக்கு 8 நாட்கள் அனுபவிக்காத பணியேற்பிடைக் காலம் ஈட்டிய விடுப்பில் சேர்த்து வைக்க ஆணையிடப்பட்டால் அவரது ஈட்டிய விடுப்பு இருப்பு
   அ) 33 ஆ) 25+3 இ) 30 ஈ) 30+3
5. விமான பயணத்தில் 510 கி.மீ பயணம் செய்த அலுவலருக்கு பணியேற்பிடைக் காலத்தில் பயண கால தகுதியான காலம்
   அ) 4 நாட்கள் ஆ) 2 நாட்கள் இ) 1 நாள் ஈ) பயண நேரம்.
6. ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்ய இயலாத காலம்
   அ) பணிக்காலம் ஆ) மருத்துவமனை விடுப்புக்காலம்
   இ) ஈட்டிய விடுப்பு காலம் ஈ) சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு காலம்.
7. கீழ்க்கண்ட நிதியிலிருந்து சம்பளம் பெறுபவர்களுக்கு மட்டுமே அடிப்படை விதிகள் பொருந்தும்.
   அ) அவசர நிதி ஆ) ஒருங்கிணைந்த நிதி இ) பொது வைப்பு நிதி ஈ) தனி வைப்பு நிதி
8. எவ்வளவு மதிப்புள்ள பொருட்கள் வாங்க திறந்த விலைப்புள்ளி பெற வேண்டும்?
   அ) ரூ.1 லட்சம் ஆ) ரூ.5 லட்சம் இ) ரூ.5 லட்சத்திற்கு மேல்
   ஈ) 10 லட்சத்திற்கும் மேல்.
9. அனுமதிக்கப்பட்ட பயணப்படி பெற 20 நாட்கள் குறைந்த பட்ச பயணம் மேற்கொள்ள வேண்டிய அலுவலர் 24 நாட்கள் பயணம் மேற்கொண்டு அதில் 4 நாட்கள் அரசு ஊர்தியை பயன்படுத்தினால் பிடித்தம் செய்யப்பட வேண்டிய நாட்கள்.
   அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) தேவையில்லை.

10. தண்டனைக் காலத்தில் முன் ஊதிய உயர்வு நிலுவையின் அது -
அ) மறுக்கப்பட வேண்டும் ஆ) நிறுத்தி வைக்க வேண்டும்.
இ) வழங்கப்பட வேண்டும் ஈ) தகுதியில்லை.

11. பணியேற்பிடைக் காலம் கணக்கிடுவதற்கான அடிப்படை விதி
அ) 105 ஆ) 106 இ) 9 ஈ) 27

12. 24 ஆண்டுகள் பணி முடித்த 56 வயது நிறைவடைந்த அலுவலக உதவியாளர் தன் விருப்பு ஓய்வு பெற்றால் வழங்கத்தக்க சிறப்பு உயர்வு காலம்.
அ) 6 ஆண்டுகள் ஆ) 5 ஆண்டுகள் இ) 2 ஆண்டுகள் ஈ) 4 ஆண்டுகள்.

13. அரசின் கேட்புரிமைகளை அடுத்துள்ள ரூபாய்க்கு கொண்டுவரும் நடைமுறை எந்த தேதி முதல் நடைமுறைக்கு வந்தது.
அ) 1.1.1974 ஆ) 1.7.1994 இ) 1.1.1996 ஈ) 1.4.1989

14. சமத்தப்பட்ட செலவினமாக கருதப்படுவது
அ) உயர்நீதி மன்ற நீதிபதிகளின் ஊதியம் ஆ) அரசு ஊழியர்கள் ஊதியம்
இ) அலுவலக சில்லறைச் செலவினம் ஈ) இவை ஏதுவுமில்லை.

15. சட்டமன்ற உறுப்பினர்கள் பயணப்படி சமர்ப்பிக்க காலக் கெடு
அ) 3 மாதம் ஆ) 6 மாதம் இ) 1 ஆண்டு ஈ) கால வரம்பில்லை.

16. குடும்ப ஓய்வூதியம் ஒப்பளிப்பு உயர்ந்த பட்ச தொகை.
அ) ரூ.1275 ஆ) ரூ.6570 இ) ரூ.9855 இ) ரூ.23100

17. இருவழிப்பயணச் சலுகை துவங்கிய தொகுப்பு ஆண்டு
அ) 1981–84 ஆ) 1985–88 இ) 1989–92 ஈ) 1993–95

18. இறுதி நிதி ஒதுக்கீடு (FMA) அரசுக்கு அனுப்ப வேண்டிய மாதம்
அ) ஜனவரி ஆ) மார்ச் இ) ஆகஸ்ட் ஈ) அக்டோபர்.

19. சில்லறைச் செலவின பட்டியல் தயார் செய்ய நிர்ணயிக்கப்பட்ட தமிழ்நாடு கருவூல விதி தொகுப்பு படிவம் எண்
அ) 52 ஆ) 58 இ) 47 ஈ) 40 (அ)

20. முதிகளில் பருவத்திலுள்ள பெண் அரசு ஊழியரின் ஈட்டிய விடுப்புக் கணக்கில் 4 நாட்கள் இருப்பு உள்ளபோது 14 வார கரு சிதைவு ஏற்பட்டால் தகுதியுள்ள கருச் சிதைவுக்கான மகப்பேறு விடுப்பு
அ) 90 நாட்கள் ஆ) 38 நாட்கள் இ) 42 நாட்கள் ஈ) தகுதியில்லை.

பயிற்சியாளர் கையொப்பம்